மில்க்வைற்சோப்
பாவிப்பாளர்களுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக
மில்க்வைற் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (14-4-66) இதழ் 66

பராபவ சித்திரை 1 துல்ஹஜ் பிறை 22 வியாழக்கிழமை

அண்ணா கோப்பி
பாவிப்பாளர்களுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது
இதயங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக
அண்ணா இன்டஸ்ரீஸ்
இணுவில்

# பதில் பிரதமர், கவர்னர் ஜெனரல் திடீர் விஜயம்

## மறைந்த தலைவருக்கு நேரில் அஞ்சலி

### சேர் துரைசாமியின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், வியாழன்

**கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவும் பதில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவும் நேற்றுவிசேஷ விமானத்தில்திடீரென யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தனர். முன்னாள் சட்டசபை சபாநாயகரும் ஈழத்தின் முதிர்ந்த ராஜதந்திரியுமான சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ளவும், மறைந்த தலைவருக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தவுமே கவர்னர் ஜெனரலும், பதில் பிரதமரும் தேசியமயசேவைமந்திரியும் இங்கு வந்தனர்.**

கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு. பெர்னாட் சொய்சா, தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியவர்கள் வேறொரு விமானத்தில் அவசரமாக வந்து சேர்ந்தனர்.

நேற்றுப் பிற்பகல் பலாலி விமானநிலையத்தில்வந்திறங்கிய பதில் பிரதமர், கவர்னர் ஜெனரல், தேசியமய சேவைகள் மந்திரி ஆகியவர்களை அரசாங்க அதிபர் திரு. ஜி. ஏ. வேர்ணன் அபயசேகராவும், உயர்தர அதிகாரிகளும், உடுப்பிட்டி எம் பி. திரு. மு. சிவசிதம்பரமும் யாழ்ப்பாணமேயர் திரு. அ. த. துரையப்பா ஆகியவர்களும் வரவேற்றனர்.

சேர். வைத்திலிங்கம்துரைசாமிக்கு இறுதிக்கிரியைகள்

(2-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை மக்களுக்கு பிரதமர் புதுவருடச் செய்தி

### அடுத்த வார இறுதியில் நாடு திரும்புவார்

லண்டன், ஏப். 13

தற்போது லண்டனில் இருக்கும் பிரதமர் டட்லி சேனநாயகா விடுத்துள்ள புதுவருடச் செய்தியில், இலங்கை மக்கள் சமாதானமாகவும், சந்தோஷமாக வாழவேண்டுமெனக் கூறியிருக்கிறார்.

பி. பி. ஸி. ஒலிபரப்பு மூலம் அவர் இச் செய்தியை விடுத்தார்.

பிரதமரின் இலங்கைப் பிரயாணம் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

தாம் இரு காரணங்களுக்காக வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொண்டதாக இலங்கைப் பிரதமர் கூறினார்.

இலங்கைக்கு வெளிநாட்டு உதவி பெறுவது இவற்றில் ஒன்று என்றும், தமது வைத்தியப் பரிசோதனை இரண்டாவது காரணம் என்றும் பிரதமர் கூறினார்.

வெளிநாட்டுத் தலைவர்களுடன் பயனுள்ள பேச்சு நடத்த வாய்ப்பு கிடைத்தது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகப் பிரதமர் கூறினார் தனது இச் சந்திப்புக்களின் பலனை, இலங்கை மக்கள் அனுபவிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லையென்றும், மக்களுக்கு இது மகிழ்ச்சியான புத்தாண்டாக அமையும் என்றும் அவர் கூறினார்

அடுத்தவார இறுதிவரை நாடு திரும்புவதை பிரதமர் ஒத்திவைத்திருக்கிறார்.

நேற்று வைத்திய நிபுணருடன் தமது உடல்நிலை பற்றி ஆலோசித்தார்.

புதுவருடசமயத்தில் தாம் நாட்டில்இல்லாதது குறித்து பிரதமர் வருத்தம் தெரிவித்தார்.

தற்போது லண்டன் வந்திருக்கும் இலங்கை கைத்தொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன, லங்க ஷயரிலுள்ள மோட்டார் வேலை ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டார். நாளை சாம்ராஜ்ய உறவுக்காரியாலயம் சென்று அவர் பேச்சு நடத்துவார்.

பிரான்ஸ், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்கனவே சென்றுள்ள பிலிப் வருகிற 19-ம் திகதி நார்வே டென்மார்க் ஆகிய நாடுகளுக்குப் புறப்படுவார்.

மயானத்தில்

## டச்சுக்காரர் பற்றிய சரித்திர உண்மை

ஹைதரபாத், ஏப். 13


ஆந்திரப் பிரதேசத்தில மேற்கு கோதாவரியிலுள்ள பாலக்கோல் என்ற நகரிலிருக்கும் டச்சு மயானத்தை முக்கிய புதை பொருள் ஆராய்ச்சி ஸ்தலமாக ஆந்திரப் பிரதேச அரசாங்கம் உத்தியோக பூர்வமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. சரித்திர சின்னம் என்ற வகையில் இதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆதரவாளர்களுக்கும்
வர்த்தக அன்பர்களுக்கும்
எமது
உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
S. R. S.
ஜவுளிமாளிகை
S. R. S. நெசவு நிலையம்
எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள் !
கூ. மொ. வி. (C. W. E.) ஸ்தாபனத்தாரின் புடவைகள் கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
இன்னும்
உங்களுக்குத் தேவையான
பலவிதமான
புடவை வகைகளும்
எம்மிடம்
மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. அப்பையா அன் கோ
(கூ. மொ. வி. அங்கீகாரம்பெற்ற புடவை வியாபாரிகள்)
82, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 506
கிளை: 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## புத்தாண்டு மலர்

இன்றைய 'ஈழநாடு' இதழுடன் புதுவருட மலரும் இணைக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

இன்று வியாழக்கிழமை (14-4-66 இந்து-பௌத்த புதுவருடப் பிறப்பையொட்டி 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் நாளை வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

சந்தேகம் மனதை மறைக்கின்றது. நண்பர்களிடம் குரோதங்களை ஏற்படுத்துகின்றது. நண்பர்களை இழக்கவும் செய்கின்றது. சந்தேகம் இருதயத்தில் பிறப்பதல்ல. சித்தத்திலிருந்தே தோன்றுகின்றது. நல்லவர்கள் ஒருவரையும் சந்தேகிக்கமாட்டார்கள். சந்தேகம் உண்மை நட்பின் விரோதி.

—சுவாமிசிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Office Phone: 18

... பராபவ ஆ சித்திரை மீ 1௨ (14-4-66)


## புத்தாண்டு

இன்று புத்தாண்டு பிறக்கிறது. இலங்கையின் இருபெரும் சமூகங்களான சிங்களவர்களும் தமிழர்களும், இருபெரும் சமயங்களான பௌத்த, இந்து சமயங்களைச் சேர்ந்தோரும் இத்தினத் தைக் கொண்டாடுகிறார்கள். இரு பகுதி மக்களும் வருடா வருடம் புத்தாண்டைக் கொண்டாடுவது வழமையேயானாலும் சென்ற சில வருடங்களைப் போலல்லாது, தேசிய ஐக்கியத்துக்கு வித்திட்டுள்ள இச் சமயத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டம் விசேஷமாகும்.

விசுவாவசு வருடத்தில் தமிழ் மக்களின் விசுவாசத்தையும்பெற்றுக் கொண்டு உருவான தேசிய அரசாங்கம் இன்று பிறந்துள்ள பராபவ வருஷத்தில் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் உழைப்பையும் இன்னும் அதிகமாகப் பெறுமென்று எதிர்பார்ப்போம். ஒன்பது வருடங்களாக உரிமைகளை ஒவ்வொன்றாக இழந்து வந்த தமிழ் சமூகம் சென்ற வருடத்தில் ஒரு சில உரிமைகளை மீண்டும் பெற்றிருக்கிறது. இன்னும் பெறவேண்டிய உரிமைகள் பல இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினர் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை நாடும் சமயத்தில் அவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையும் பொறுப்புமாகும். உலகமெலாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும் என்ற பாரதியாரின் கனவு பராபவ வருடத்தில் நனவாகும் நல்ல அறிகுறி மலாயாவில் அடுத்தவாரம் ஆரம்பமாகும் தமிழாராய்ச்சி மகாநாட்டிலிருந்து தோன்ற விருக்கிறது. தமிழும் தமிழரும் வாழ வேண்டுமானால் தமிழரின் பெருமையைப் பிறர் அறியச் செய்ய வேண்டும். இதற்கு உழைப்பும் ஊக்கமும் வேண்டும். புத்தாண்டு இதை தமிழருக்கு அளிக்குமாக.

## சேர் வைத்திலிங்கம் துரைசாமி

ஈழத்தின் முதிர்ந்த ராஜதந்திரிகளுள் ஒருவரான சேர் வைத்திலிங்கம் துரைசாமி நிறைந்த வாழ்வு வாழ்ந்து தமது 92-வது வயதில் மறைந்தார். அவர் மறைந்தாலும் அவரது வாழ்க்கையும் அவர் ஆற்றிய பணிகளும் நமது அரசியல்வாதிகளுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டுவதாக இருக்கவேண்டும்.

சேர் துரைசாமி யாழ்ப்பாணத்தில் பிரபல வழக்கறிஞராக தொழில் புரிந்தவர். அவரது ஆழ்ந்த அறிவும் மதிநுட்பமும் வழக்குகளில் நீதியரசர்களைத் தம்வயப்படுத்தி வெற்றியீட்ட உதவின. 1904-ம் ஆண்டில் சேர் துரைசாமி அரசியலில் பிரவேசித்தார். சட்டசபையில் வடமாகாணத்தின் முதல் பிரதிநிதியாக அவர் தெரிவு செய்யப்பட்டார். அரசியல், சமயம், மற்றும் பொதுவிஷயங்களிலும் முன்னணியில் நின்று உழைத்த அவர் சில சந்தர்ப்பங்களில் அக்காலப் பெருந்தலைவர்களுடன் ஒத்துழைத்தும், எதிர்த்தும் தமது கொள்கையை விட்டுக்கொடுக்காமல் உறுதியுடனும், துணிச்சலுடனும் தமக்குச் சரியெனப்பட்டதைச் சாதித்திருக்கிறார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் பல கிளர்ச்சிகளும், இயக்கங்களும் நிகழ்ந்தன. இக்காலத்தில் தான் சேர் பொன். இராமநாதன் தலைமையில் சைவப்பள்ளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் சேர் துரைசாமியும் முன்னணியில் நின்றார். சேர் இராமநாதனுக்குப்பின்னர் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

இலங்கையின் கல்விக்கும் சமூகசீர்திருத்தத்திற்கும், கலை, கலாச்சாரவிருத்திக்கும் அக்காலத்தலைவர்களான சேர் பாரன் ஜயதிலகா, டபிள்யூ டி. சில்வா, டி. எஸ். சேனநாயகா ஆகியோருடன் சேர் துரைசாமி ஒத்துழைத்தார். இந்து-பௌத்த ஒற்றுமைக்கும் அவர் உழைத்தார். மதுஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்து அதற்காகத் தீவிரமாக உழைத்தார். டொனமூர் அரசியல் திட்டம் வந்தபோது அது அளிக்கும் சுதந்திரம் போதாதென்று கூறி எதிர்ப்பியக்கம் ஒன்றை சேர் துரைசாமி ஆரம்பித்தார். டொனமூர்திட்டத்தை சேர் பாரன் ஜயதிலகா, டி. எஸ். சேனநாயகா ஆகியோர் ஆதரித்ததும் அவர்களை விட்டுவிலகி அகில இலங்கை லிபரல் சழகம் ஒன்றை ஈ. டபிள்யு. பெரேரா, பிரான்சிஸ் டி. சொய்சா, டி பி ஜாயா ஆகியோருடன் சேர்ந்து அமைத்து எதிர்ப்பு முன்னணியை உருவாக்கினார். 1932-ல் தேர்தலை இக்கழகம் பகிஷ்கரித்தது பகிஷ்காரத்தை யாழ்ப்பாணம் கைவிட்டபின்னரும் சேர் துரைசாமி தமது கொள்கையைக் கைவிடவில்லை. பின்னர் அவர் ஊர்காவற்றுறைத்தொகுதியிலிருந்து போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

சேர் துரைசாமி இன்று மறைந்துவிட்டாலும், அவர் ஆற்றிய அரசியல் சமய, சமூகப்பணிகளும், அவர் காட்டிய உறுதியும், திறமையும் வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டவேண்டும் இதற்கு அவரது நினைவு என்றும் நிலைத்திருக்கத் தகுந்த நினைவுச்சின்னம் அமைப்பு வேண்டியது இன்றைய சந்ததியினரின் கடமை.

## இலங்கையர்களுக்கு 2 வருட தொழில் நுட்ப பயிற்சி
### ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு வழங்கும்

கொழும்பு, புதன்

அரசாங்க தனிப்பட்ட துறைகளைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு நடைமுறை தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் பொருட்டு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு பல உபகாரச் சம்பளங்களை வழங்கியிருக்கிறது.

சென்ற ஆண்டுகளிலும் இதுபோன்ற உபகாரச் சம்பளங்கள் பல இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இருவருட பயிற்சி, இத் திட்டத்தில் அடங்கும். ஜெர்மன் மொழி போதனையும பயிற்சியின் அம்சங்களில் ஒன்று.

இலங்கை அரசாங்க கெஸட்டில் பிரசுரிக்கப்படும் கல்வி, கலாச்சார அமைச்சுக்கே இதுசம்பந்தமான சகல விண்ணப்பங்களும் நேரடியாக அனுப்பப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதில் பிரதம, கவர்னர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் சுமார் 4-15 மணியளவில் பதில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவும், இதர பிரமுகர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களின் மரியாதையைக் குறிக்குமுகமாக மறைந்த பெரியாருக்கு மலர்வளையங்கள் சாத்தப்பட்டன. அதன்பின் பூதவுடலின் அருகேநின்று பிரமுகர்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். தமிழ் முறைப்படி நடைபெற்ற ஈமக்கிரியைகளை கவர்னர் ஜெனரலும் பதில் பிரதமரும் அக்கறையோடு கவனித்தார்கள். காலஞ்சென்றவரின் நான்கு புத்திரர்களும், பேரப்பிள்ளைகளும் தமது இறுதிக் கடமைகளை நிறைவேற்றியபோது கவர்னர் ஜெனரல் அவைகளைக் கவனமாக அவதானித்து பக்கத்தில் இருந்தவர்களிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

### உபசபாநாயகர்

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், உதவி சபாநாயகர் ஷேர்லி கொரியா, மேஜர் தர்மபாலா எம். பி. ஆகியவர்களும்வருகைதந்து தமது இறுதி மரியாதைகளைச் செலுத்தினார்கள். சபாநாயகர் சா. அல்பர்ட் பீரிஸ் சுகவீனம் காரணமாக வரமுடியாமற் போனதால் அவர் சார்பில் உபசபாநாயகர் ஷேர்லி கொரியா சலந்து கொண்டார். கவர்னர்ஜெனரல், பதில்பிரதமர், தேசியமய சேவைகள் மந்திரி, எம். பிக்கள், அரசியல்தலைவர்கள், மற்றும் பிரமுகர்கள் அனைவரையும் காலஞ்சென்றவரின் உறவினரான திரு. ரி. நடராசா வரவேற்றார். பிரமுகர்களுக்கு காலஞ்சென்றவரின் பாரியார் திருமதி துரைசாமி அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். அவருக்கு தமது அனுதாபங்களை பிரமுகர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

### புறப்பட்டனர்

கவர்னர் ஜெனரலும் பதில் பிரதமரும் சுதேசிமய சேவைகள் மந்திரியும் வேறு சில பிரமுகர்களும் கொழும்பில் அதிமுக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவேண்டியிருந்ததால் சுமார் 4-30 மணியளவில் திரும்பிவிட்டார்கள்

இறுதிக்கிரியைகள் முடிவுற்று இறுதி யாத்திரை சுமார் 5 மணியளவில் ஆரம்பித்தது. சங்கொலிகள்முழங்க, அரோகரா கோஷம் எங்கும் ஒலிக்க, பூதவுடல் புஷ்பரதத்தில் வைக்கப்பட்டு வில்லூன்றி மயானத்தைநோக்கி இறுதியாத்திரை ஆரம்பமானது

முதுபெரும் தமிழறிஞரும் ராஜதந்திரியும், இலங்கை சட்டசபையின் முதல சபாநாயகருமான சேர். வைத்திலிங்க துரைசாமியின் பூதவுடல் நேற்று மாலை வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## எண்ணெய்க் கப்பலின் நிலை

பனாமா, ஏப்ரல் 13

ரொடீஷியாவுக்கு எண்ணெயுடன் மொஸாம்பிக் பேரா துறைமுகத்தில் நிற்கும் பனாமா கப்பல் ஒன்றுக்கான அங்கீகாரத்தை அந்த நாட்டு அரசாங்கம் வாபஸ் பெற்றிருக்கிறது


மற்றோர் எண்ணெய்க் கப்பல் தென்னாபிரிக்காவின் டர்பன் துறைமுகத்தில் நிற்கிறது.

இக் கப்பல்களிலிருந்தும் இன்னும் எண்ணெய் இறக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

## சங்கீதக்கச்சேரி

யாழ்ப்பாணம், வியாழன்

ஞானதீபம் பத்திரிகை நிதிக்காக வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய திறந்தவெளி அரங்கில் திரு. சு. அம்பிகைபாகன் தலைமையில் சங்கீதக் கச்சேரியொன்று இன்று மாலை நடைபெறவிருக்கிறது



அண்ணாமலை சர்வகலாசாலையில் நான்கு வருடங்கள் சங்கீதப்பயின்று, சங்கீத பூஷணம் பட்டம்பெற்று ஈழம் திரும்பியுள்ள செல்வன் எஸ் எஸ் நடராசனின் அரங்கேற்றம் யாழ்ப்பாணம், காரைநகர் சிவன் கோவிலில் இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணத்திலும் நகரசபை மண்டபத்தில் 18-ம் திகதியும் 27-ம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெறவிருக்கிறது

## ஐயாறன் எழுதுவது

அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பான புது வருஷ வாழ்த்துக்கள். புது வருஷத்துக்கு இவ்விதம் வாழ்த்துவது வெறும் அர்த்தமற்ற சம்பிரதாயமா? அல்லது இதில் ஏதாவது கருத்தோ பயனோ உண்டா?

யாராவது நம்மை வாழ்த்துகையில் நம் உள்ளத்துக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. அந்த மட்டில் அதற்குப் பயன் உள்ளதுதானே. வாழ்த்துவது தமிழர் பண்பு. மணிவாசகப் பெருந்தகையும் தமது சிவபுராணத்தின் முதல் பல அடிகளில் வாழ்க, வாழ்க என்றே இறைவனைவாழ்த்துகின்றார்.

பிறரை நாம் வாழ்த்தி வாழ்த்த நாம் வாழுகின்றோம். வெறுஞ் சொற்களால் வாழ்த்தினால் மட்டுமல்லாது, பிறரை வாழவைக்க வேண்டும். வாழ்வின் ரகசியமும் இதுவே.

"கேடு பிறர்க்கெண்ணத் தான் அழிவான் என்ற சாத்திரம் கேளாயோ.." என்பது மகாகவி பாரதியாரின் மகாவாக்கியம். பிறருக்கு யார்கேடு எண்ணுகிறார்களோ, அவர்களே அழிவர் என்பது சாத்திரமாம். மறந்தும் பிறருக்குக் கேடு நினைக்கலாகாதென்கிறார் வள்ளுவப் பெருந்தகையும்.

பழைய வருடத்தில் போனது போகட்டும் புத்தாண்டிலே நாம் நன்கு வாழ பிறரை வாழ்த்தி, வாழவைப்போம்.

ஃ ஃ ஃ

வெள்ளவத்தை வழியாக பஸ்ஸிலே மேல் தட்டில் வந்துகொண்டிருந்தேன். தூரத்தில ஒரு கடைக்கு முன்பாகப் பெருங்கூட்டம். பொலிசாரும் நின்றுகொண்டிருந்தனர். என்ன கலவரமோ என்று கிட்டவந்ததும் கவனித்தேன். கடைக்கு முன் நீண்ட 'கியூ' வரிசை. வளைந்து வளைந்து வெதூரம் சென்றது. கடையிலிருந்து பலர் கையிலே இரு போத்தல்களுடன் அவசரமாக வெளிவந்தனர்.

அது என்னவென்று தெரிகிறதா? அது ஒருசாராயத் தவறணை. புது வருடத்தை நாம் குஷியாகக் கொண்டாட நம அரசாங்கத்தார் தாராளமாகத் தயாரித்து விநியோகிக்கும் அருமைச் சரக்கு.

இதைப் பார்த்ததும் புது வருடத்தன்று கொலை, கலவரங்கள் அதிகம் ஏற்படாதிருக்க வேண்டுமே என்று கவலை ஏற்பட்டது. கூடுமானவரை, இன்று நாம் வெளியில் செல்லாதிருப்பதே புத்தி என்று தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

நாம் புதுவருடத்தைக் கொண்டாட பல நாட்கள் விடுமுறை விட்டிருக்கிறார்கள் இந்த விடுமுறையைப் படிக்கொண்டாடுவது என்பது நம்மில் பலருக்கும் பிரச்னை புத்தாண்டு பிறக்கும் சமயம் மிகப்புனிதமானது. முதல் நாளை எப்படிக் கழிக்கிறோமோ, அப்படியே வருடம் அனைத்தும் இருக்கும் என்பது பலர் நம்பிக்கை.

புத்தாண்டு அனைத்தும் மகிழ்ச்சிகரமாக இருக்கவேண்டுமென்று நினைத்து முதல் நாளை தங்கள் தங்களுக்கு உகந்தமுறையில் "சந்தோஷமாக"க் கொண்டாடுகின்றார்கள். கோவில் சென்று வழிபட்டு, குடும்பத்துடன் விருந்துண்டு சுற்றத்தவரைக் காண்பதில் சிலருக்கு இன்பம். நோவிலுக்குப்பதில் சினிமா பார்ப்பதில் இன்னும் சிலருக்கு

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்


அச்சுவேலி ஐக்கிய பண்டகசாலைக்கு

### மனேச்சர் தேவை

1. வயது:- 25—45.

2. தராதரம்: கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்சிபெற்றவர். (பயிற்சிப் பத்திரமும், மூன்று நற்சாட்சிப் பத்திரங்களும் காண்பிக்கவேண்டும்)

3. பிணை:- ரொக்கம் ரூபா ஆயிரம், உறுதி ரூபா மூவாயிரம்.

4. விலாசம்:- கௌரவ காரியதரிசி, அச்சுவேலி ஐக்கிய பண்டகசாலை, அச்சுவேலி.

5. 25-4-66-ம் தேதியின் முன் பதிவுத்தபாலில் அனுப்புக.

ஏ. ஆர். மனுவேற்பிள்ளை,
கௌரவ காரியதரிசி,


## இன்னிசை விருந்து


புதுவருட தினத்து மாலை (6-30 மணி) சங்கீதக் கச்சேரிகேட்டு ஆனந்தியுங்கள்! யாழ்ப்பாணம்- வைத்தீஸ்வர வித்தியாலயத்தில், சங்கீத பூஷணம் பிரமஸ்ரீ ப. முத்துக்குமாரசுவாமி சர்மா கோஷ்டியினர் நிகழ்த்துவது! 128


## பிரவேசங்கள்


ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப் விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

**ஐக்கியகலாசாலை**
நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். E


## வீதியின் அவல நிலை

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை குறுக்கு றோட்டு சமீப காலமா உருககுலைந்து வாகனப் போக்குவரத்திற்கு கஷ்டமான நிலையில் இருப்பதையிட்டு சரவணைக் கிராமத்திலிருந்து ஒரு தூது கோஷ்டியினர் யாழ்ப்பாண எம் பி திரு. ஜி ஜி. பொன்னம்பலத்திடம் முறையீடு செய்துள்ளனர்.

திரு பொன்னம்பலம் வீதியை உடனடியாகத் திருத்தம் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சிப்பதாகத் தூது கோஷ்டியிடம் தெரிவித்துள்ளார்.

## சங்கானைக்கு மின்சாரம்

சுழிபுரம், புதன்

சங்கானை பட்டின சபை எல்லைக்குட்பட்ட பகுதிக்கு மிகவிரைவில். மின்சாரம் கிடைக்க இருக்கின்றன. மின்சார இணைப்பு வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அநேகமாக ஜூன் மாத முற்பகுதியில் மின்சார விநியோகம் ஆரம்பிக்கப்படும் என தெரியவருகின்றது.

## அயூப். அனுதாபம்

ராவல்பிண்டி, ஏப்ரல் 13

இந்தோனேஷியாவின் முதலாவது பிரதம மந்திரி சுல்தான் ஷாரீர் மரணம் குறித்து ஜனாதிபதி அயூப் அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

# "இராமநாதன் இசைக்கல்லூரி பல்கலைக்கழகமாக வேண்டும்"

மாவிட்டபுரம், புதன்

இராமநாதன் இசைக்கல்லூரி விஸ்தரிக்கப்பட்டு தமிழ்ப் பெண்கள் சங்கீதம், நடனம், வீட்டுப்பணி, சைவ சமயம் முதலியன கற்கத் தக்கதாகவும் தமிழ்மக்களுக்கு இந்நிலையம் ஒரு பல்கலைக்கழகமாகவும் வளர வேண்டுமென்ற நோக்கத்தை ஆராய்வதற்காக ஒரு பொதுக்கூட்டம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தமது தலைமையுரையில் சேர் பொன் இராமநாதன் பல்லாண்டுகளாக பரமேஸ்வராக்கல்லூரி, இராமநாதன்கல்லூரி ஆகிய கல்லூரி நிலையங்களின் வளர்ச்சியில் பங்குபற்றியதாகவும் சேர் பொன் இராமநாதனின் சிறந்த இலட்சியங்களுக்கு அமையவும் தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கும், சைவசமய அபிவிருத்திக்கும் சேர் பொன் இராமநாதன் தமிழ் சமூகத்திற்கென விட்டுச்சென்ற ஆஸ்திகள் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்றும் தமிழ் உலகம் இப்படியான திருத்தொண்டில் விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு.ரி முருகேசப்பிள்ளை பேசுகையில், சேர் பொன் இராமநாதன் ஆறுமுகநாவலர் ஆரம்பித்த தமிழ் மறுமலர்ச்சியை தொடர்ந்து வளர்க்கும் நோக்கத்தோடு தமிழ் மக்களுக்குச் செய்த தொண்டுகளை எடுத்துக்காட்டி தமிழ் சமூகம் அதனை தொடர்ந்து பாதுகாக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் சிவஞானரத்தினம் பேசுகையில், இராமநாதன் இசைக்கல்லூரியில் தற்போது 26 மாணவிகள் கல்வி கற்றுவருகின்றனர் என்றும் இந்தியாவிலிருந்து ஒரு தகுந்த அதிபரை வரவழைக்க வேண்டுமென்றும் இசைக்கல்லூரிக்கு ஓர் நிரந்தர ஸ்தாபனமும், விடுதிச்சாலையும் உண்டுபடுத்தப்படவேண்டுமெனவும் இராமநாதன் இசைக்கல்லூரி பல்கலைக்கழகமாக வளரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு எஸ். சுவாமிநாதன் பேசுகையில், இராமநாதன் மகளிர்கல்லூரி வளவிற்குள் கல்வி இலாகாவால் சுவீகரிக்கப்படாத ஐந்து ஏக்கர் நிலத்தையும் அதற்குள் அமைந்திருக்கும் கட்டிடங்களையும் இராமநாதன் இசைக்கல்லூரி உபயோகத்திற்காக எடுக்கப்படல்வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

செனட்டர் திரு. சு. நடராசா உட்பட இன்னும் பலர் பேசினர். பின்னர் ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: திரு. செ. தனபாலசிங்கம்,

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்பம். குடித்துவிட்டு 'குஷி'யாக இருப்பதில் வேறு சிலருக்கு மகிழ்ச்சி. இப்படி ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற முறையில் 'இன்பமாக'ப் புதுவருடத்தைக் கழிக்கின்றார்கள். மிகவும் சரி.

ஃ ஃ ஃ

ஆனால் மதுபானம் பஞ்சமா பாதகங்களில் ஒன்றென்பது புத்தர் பெருமானின் உபதேசம். பல சமயங்களும் இதை ஒரு பாவமாக வெறுக்கின்றன. இலங்கையிலே பல சமயங்களுக்கும் சிறப்பாக பௌத்த சமயத்துக்குப் புத்துயிர் அளிப்பதாகக் கூறி போயா தினங்களை விடுமுறை விட்டுள்ள நமது அரசாங்கம், மதுபானத்தை ஏராளமாக உற்பத்திசெய்து, விற்பது புனிதமான விடுமுறை நாட்களில் மக்கள் பலரும்குடிக்குப்படி செய்வதாகாதா? இது தான் சமயத்தையும் சிறப்பாக பௌத்தத்தையும் அரசாங்கம் வளர்க்கும் லட்சணமா?

மகாத்மாகாந்தி மதுவிலக்கை தமது தேசிய நிர்மாண திட்டத்தில் முக்கியமாக வற்புறுத்தினர். இந்திய அரசியல திட்டத்திலே மதுவிலக்குக் கொள்கை சட்டபூர்வமாகச் சேர்க்கப்பட்டுள்ளதுடன் பல மாகாணங்களிலும் அது அமுலுக்கு வந்து, பல குடும்பங்களைக் காப்பாற்றியுள்ளது.

பௌத்த நாடு என்றும் 'தர்மதுவீபம்' என்றும் பெருமை பேசும் நம்இலங்கையிலே அரசாங்கம் இது பற்றி என்ன செய்கிறது? நமது பிரதிநிதிகளும். அரசியல் கட்சிகளும் இதைப் பற்றி சற்றே சிந்தித்து புத்தாண்டிலே நம் இலங்கையில் மதுவிலக்குச்சட்டத்தை நிறைவேற்ற முற்படுவார்களா?

இப்போதுள்ள நிலைமையைப் பார்க்கையில், இது நடக்கக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை தான் என்றாலும் இதில் நாம் ஒவ்வொருவருக்கும் பங்கும் கடமையுமுண்டு நம்மைப்பொறுத்தவரை குடிப்பழக்கம் உள்ளவர்களும், இந்தப் புனித நாளிலாவது அதைத் தொடுவதில்லை என்று தீர்மானித்து. புதுவருடத்திலே மது அரக்கனிடமிருந்து தங்களை விடுதலை செய்யுமாறு இறைவனைப்பிரார்த்திக்கவேண்டும்

நாடு அடிமைப்பட்ட காலத்திலே, மதுபானமும் ஒரு தேசிய சாபக்கேடாகப்புகுந்துவிட்டது. நாடு விடுதலை அடைந்துவிட்டபின் இந்தியாவைப் பின்பற்றி இங்கும் மதுவிலக்கை அமுல்நடத்த வேண்டியது நமது எம். பி மார்கள், மந்திரிகள், அதிகாரிகள் முதலியவர்களது முக்கிய கடமை. இந்த நல்ல புத்தியை நமக்கு நல்க வேண்டுமென்று புதுவருடத்திலே, வள்ளுவப் பெருந்தகை, புத்தர் பெருமான், மகா மா காந்தி இவர்கள் பெயர்களால் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன் புத்தாண்டெல்லாம் இன்பமே சூழ்க, எல்லோரும வாழ்க.

ஃ ஃ ஃ

இன்று நன்று என்றுநின்ற இச்சையால், பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின், மின்தயங்கு சோதியாக வெண்மதி விரிபுனல், கொன்றைதுன்று சென்னியான்கோடிகாவு சேர்மினே

—திருஞானசம்பந்தர்

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில இசை பயின்று 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்று வந்திருக்கும் நயினை சகோதரிகள் திருமதி பார்வதி குகதாசன் செல்வி தில்லைநாயகி சின்னக்குட்டி அவர்களது இசை அரங்கேற்றம் நயினை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் சந்நிதானத்தில் நாளை இரவு நடைபெறும். விழாவிற்கு சிவ ஸ்ரீ ஐ. கைலாயநாதக்குருக்கள் தலைமை தாங்குவார். இசையாசிரியர் திரு. வே. சிவராசா உட்பட பலர் ஆசியுரை வழங்குவார்.

## வரி விளம்பரம்


### வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் வீடு (தட்டாதெரு) (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் லேடீஸ் கொலிச்சுக்கும், சமீபத்தில்) எல்லா வசதிகளுடன் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: S. K. சேனாதிராசா, சேனாதிராசா நகை மாளிகை, கொக்குவில் கிழக்கு. 202

### கல்வி

விவேகானந்த கல்வி நிலையம் தெல்லிப்பழை, G C.E. (O. L; A. L.) கலைவிஞ்ஞான வகுப்புக்கள் சிங்கள வகுப்புக்கள் 15-4-66முதல் ஆரம்பமாகின்றன. சேருங்கள். 215

ஆசிரிய பயிற்சி விண்ணப்பத்திற்கு 5 பத்து சத முத்திரை அனுப்பவும். வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 210

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி, முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள்! எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### பிரபல சோதிடம்

சாதக பலன் ரூபா 3-00
ரேகை பலன் ரூபா 2-00
ஆரூட பலன் ரூபா 1 00
எஸ். சிவகுருநாதன், 160, அரசடி றோட். கந்தர்மடம், யாழ்ப்பாணம். 214

### தேவை

விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி,(வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம்.

நெசவு வேலைசெய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. சி. பி. சிங்கம், 158, சட்டநாதர் றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 49

கொந்தருத்து முறையில் கொழும்பில் உழவு மெசின் ட்ரூக்டரில் மண் எடுத்துச் செல்வதற்கு ட்ரூக்டர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் லாறிகள் ட்ரூக்டர் லைசென்ஸ் உள்ளவர்களாயிருக்கவேண்டும். அத்துடன் ரொக்கமாக பிணைப்பணமும் கட்டவேண்டும். விபரங்களுக்கு: கே. சண்முகம், 86, அவிசாவளை வீதி வெல்லம்பிட்டியா. 211

### தவறிவிட்டது

மன்னார் — யாழ்ப்பாணம் பஸ்ஸில சென்ற திங்கட்கிழமை (10-4-66) புத்தகங்களும் அப்பியாசக் கொப்பிகளுமடங்கிய கார்ட்போர்ட் பெட்டியொன்று தவறுதலாக மாறிக்கொண்டுசெல்லப்பட்டுள்ளது. தவறி எடுத்துச்சென்றுள்ளவர் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் அல்லது யாழ்ப்பாணம்பஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். 217

12-4-66 காலை 7-30 மணி யளவில் காரைநகர்-கிளிநொச்சி பஸ்ஸில் பு. குருசாமி,கு. தங்கம்மா, கு. தவராசசிங்கம் ஆகியோரின் கூப்பன்கள் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கே. தங்கவேலு, 207, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 218


## 29வது ஆண்டுவிழா

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுளவிருத்திச் சங்கத்தினர் தமது 29-ம் ஆண்டுவிழாவை மிகவும் விரிவான முறையில் வட்டு மேற்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் கொண்டாடினர்விழாவுக்கு திரு க. மகேஸ்வரன் தலைமை வகித்தார். "உதிர்ந்த மலர்" எனனும் சமூக நாடகம் கழக உறுப்பினர்களால்மேடையேற்றப் பட்டது.

காரியதரிசி: திரு. அ. சரவணமுத்து, தனாதிகாரி: திரு. எஸ். கிருபாமூர்த்தி.

## மெக்ஸிகோ செல்வார் ஜோன்ஸன்

வாஷிங்டன், ஏப்ரல் 13


ஆபிரகாம் லிங்கனின் சிலை ஒன்றைத் திறந்துவைக்குமுகமாக ஜனாதிபதி ஜோன்ஸன் மெக்ஸிகோவுக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது.


அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கைக்காரர்கள்
அனைவருக்கும்



எமது
இதயங்கனிந்த
புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

யானை மார்க்



அஸ்பெஸ்டஸ்
கூரை சீற்றுக்கள்
(6' 7' 8' 9' 10' அளவுகள்)
பிளேன் சீற்றுக்கள்
(4'×4',6'×4' அளவுகள்)
எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.

சண்முகம் ஸ்ரோர்ஸ்
(யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள்)
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)

மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி

(9 மாறுபட்ட வேடங்களில்)

நாகேஷ் —— மனோரமா

மற்றும் பலர் நடித்திருக்கும்

ஸ்ரீவிஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ

நவராத்திரி


## கண்டெடுக்கப்பட்ட பொருள்

யாழ்ப்பாணம், புதன்

மன்னார்-யாழ்ப்பாணம் பஸ்ஸில் திங்கட்கிழமை காலை ஒரு சோடி காலணிகள் உட்பட சில பொருட்களைக் கொண்ட ஒரு பெரிய பெட்டி நீர்வேலியைச் சேர்ந்த எஸ். அருளானந்தம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.


REGAL--JAFFNA
NOW SHOWING!

Jack Palance
Anita Ekberc
in
THE MONGOLS
(Supertotal scope - Color)



ரஸிகர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நியூ காலிங்கன் (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி

எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி நடித்த

எங்கள் வீட்டுப்பிள்ளை



ரஸிகர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ராஜா (யாழ்ப்பாணம்)

6-30, 9-45க்கு மட்டும்

பாரத நாட்டின் வீரபுத்திரன்

4-45க்கு மட்டும்
TWIST ALL NIGHT


## பருத்தித்துறையில் புதுவருடப்போட்டிகள்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை பொலிஸ் பகுதினர் நடத்தும் புதுவருடப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

காலையில் ஆரம்பமாகும் ஐந்துமைல் மரதன் ஓட்டப் போட்டியுடன் தாச்சிப் போட்டி, கரபந்தாட்டப் போட்டி, மல்யுத்தப் போட்டி ஆகியனவும் இன்று நடைபெறும். இரவு வாண வேடிக்கைப் போட்டிகள் இடம்பெறும்.

போட்டியில் பரிசு பெறுபவர்களுக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. அப்துல்காதர் பரிசுகள் வழங்குவார்.

## காரியாதிகாரி மரணம்

கொழும்பு, வியா.

திருகோணமலை தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. தர்மராஜா ஆர்னல்ட் மதவாச்சிக் குளத்தில் மூழ்கி மரணமானார்.

குளத்தின் அணைக்கட்டு வழியாக தமது மகனுடன் சென்று கொண்டிருந்தபொழுது மகன் தவறிக் குளத்தில் விழவே அவரைக் காப்பாற்றுவதற்காக குளத்தில் பாய்ந்தாரென்றும் சுளியில் சிக்கிய அவர் நீருக்குள் மறைந்துவிட்டதால் பல மணித்தியாலங்கள் தேடியும் உடல் காணப்படவில்லை யென்றும் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா ஸ்தலத்துக்குவிரைந்துமீட்பு வேலைகளைத் துரிதப்படுத்தியதன் பயனாக அவர் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. அவரதுமகன்உயிர்பிழைத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் படுகொலை தினம்

அமிர்தசரஸ் ஏப்ரல் 13

ஜாலியன்வாலாபாக் தினத்தை முன்னிட்டு பிரதமர் இந்திரா காந்தி விடுத்துள்ள செய்தியில் 47 ஆண்டுகளுக்குமுன் இங்கு சிந்தப்பட்ட இரத்தம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைமுடிவுக்குக் கொண்டுவரும் முதல் வழியாக இருந்தது எனக் கூறியிருக்கிறார்.

1919-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் திகதி ஜாலியன்வாலா பாக்கில் 400 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1300 பேர் காயப்பட்டனர். அனைத்தும் 15 நிமிடங்களில் நடைபெற்றது.

## லண்டனுக்கு புதிய ஜெட்சேவை

பம்பாய், ஏப்ரல் 13

வருகிற அக்டோபர் 13-ம் திகதி முதல் பம்பாயிலிருந்து லண்டனுக்கு புதிய ஜெட் விமான சேவை ஒன்றை 'ஏர் இந்தியா' நடத்தும் என்றும், வழியில் டெஹ்ரானில் விமானம் நிற்பதுபற்றி ஈரான் அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

திருகோணமலை காரியாதிகாரி திரு. ஜே. டீ. ஆனல்ட் மிகச் சோகச் சூழ்நிலையில் அகாலமரணமானார், அன்னாரின் பூதவுடல் நாளைவெள்ளிக்கிழமை (15-4-66) மாலை 4-30 மணிக்கு மானிப்பாய் தெற்கிலுள்ள "பவளகிரி" இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். 219




அனைவருக்கும் எமது உளங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு திறமான

இரும்புச் சாமான்களும்

பெயின்டு வகைகளும்

அஸ்பஸ்டஸ் சீற்றுகளும்

மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக்கொள்ளலாம்

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் வீதி, - - - - வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
புதுவருட வாழ்த்துக்கள்

கே. என். எம்.
மீருன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னுதிட்டி, — யாழ்ப்பாணம்
போன்: 585

ஈழநாடு

புதுவருட மலர்

T'phone: 576 T:grams 'SITHA'

இலங்கையில் டமாகாணம் முழுவதும்
கொண்டாட்டங்களையும்
விசேஷங்களையும் சிறப்பிப்பது
''சீதா ஸ்பெஷல்
குளிர்பானங்களே''

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்
சீதா சோடா தொழிற்சாலை
291, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 576: தந்தி: 'சீதா'

# சமய அறிவின் மறுமலர்ச்சியும் சமூகவாழ்வின் மலர்ச்சியும்

மக்கட் சமுதாயம் தன் சமூக வாழ்வில் வளர்ச்சியடைவதற்கு அடிப்படையாகவுள்ளது சமய அறிவின் மலர்ச்சியேயாம். எமது இலங்கை வாழ் மக்களைப் பொறுத்த அளவில், இங்குள்ள மக்கள் கைக்கொள்ளும் சமயப் பிரிவுகள் திரட்டி நோக்குமிடத்து விரல்விட்டு எண்ணத்தக்கன. அவை:- பௌத்தம், சைவம், கிறீஸ்தவம், இஸ்லாம் என்பன. சமுதாயம், சமூகம் என்பன ஒரே கருத்துடைய சொற்கள். மனிதன் சமூகமாக வாழ்ந்து சிறப்படைய வேண்டியவன்; தனித்துவாழ முடியாதவன். மனிதவாழ்வுக்கு அறிவும் பொருளும் அவசியம் தேடப்படவேண்டியன. ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்வதனுல் அறிவையும் பொருளையும் தேடிப்பெற்றுக் கொள்ள முடியுமேயன்றி, மனிதன் தனித்து அவற்றை நிறைவாகப் பெறுதல் முடியாது. சமூகம் எனத்திரட்டி நோக்குமிடத்து இன மத பேதங்கள் குறுக்கிடுகின்றன இவ்வாருன பேதங்கள் இருக்கத்தான் வேண்டுமா? உலகம் முழுவதும்- இன்றேல், ஒரு நாட்டு மக்கள்

(கு. வை. ஆ. சர்மா)

யாவரும் பேதமற்ற ஒரே சமூகமாய் இருக்க முடியாதா? இந்த வினுக்களுக்கு விடைகாண வேண்டியது அறிவுசான்ற மக்கள்கடன்.

''லோகோ பின்னருசி''- அதாவது, பேதத்தில் சுவை காண்பது உலக இயல்பு. இயற்கையிலே ஒரு சிறிதும் பேதமில்லாமல் ஒன்று ஒன்றுபோலப் பிறிதொன்றைக் காணமுடியாது. செயற்கையிலே ஒரு பொருளைப்போலப் பிறிதொன்றைச் செய்துவிடலாம். இயற்கையிலும் எல்லாம் ஒன்றுபோல அமையுமாயின் அங்கே அழகோ சுவையோ இருக்கமுடியாது. வெய்யிலிலே காய்ந்தவனுக்குத் நிழலின் அருமை தெரியும். இருளிலே திளைத்தவனுக்குத்தான் ஒளியின் அழகுதோன்றும். சூரியனிடத்திலிருந்து தோன்றும் ஒரே வெள்ளொளியிலிருந்து ஏழுவகையான வேறுபட்ட நிறங்கள் தோற்றுவதையும், அவ்வேழுநிறங்களும் ஒன்றுபடும்போது மீண்டும் அவை ஒரே வெள்ளொளியாக மாறுவதையும் கொண்டுமக்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய அடிப்படையான பெரிய உண்மை ஒன்று இருக்கிறது. ஒற்றுமையில் வேற்றுமை கொண்டு சிறப்பதும், வேற்றுமையிலும் ஒற்றுமைகண்டு உதவி, இன்புறுவதும் மனித இயல்பு என்பதேயாகும்.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து கொள்ளாமையே உலகில் நேரும் சண்டைகள், பூசல்கள், மனக் கொதிப்புக்களுக்கெல்லாம் காரணமாகும். விரிந்த மனப்பாங்குடையவர்கள் இந்த உண்மையை இலகுவில் உணர்ந்து கொள்வர். ஒடுங்கிய மனமுடையவர்கள் அதனை உணர்தல்

(8-ம் பக்கம்பார்க்க)

## இனிமை கொள்ள எழுக நீ!

— இ. நாகராஜன் —

குயிலெழுந்து கொம்பிருந்து
கூக்கூவென்னப் பாடிடும்
மயிலெழுந்து மஞ்சுகண்டு
மகிழ்வுபொங்க ஆடிடும்
துயிலெழுந்த தும்பிவாழ்த்துச்
சொல்லிப் பூவைத் தேடிடும்
உயிரிசைந்த எழிலைக்காண
ஊக்கமுந்த எழுகநீ!

வசந்தகாலம் மருவுமின்பம்
மலிந்திலங்க மலர்வனம்
இசைந்தபூவில் அளைந்ததேனை
எங்குஞ்சிந்தி இன்புற
அசைந்துவீசிக் கொடிகளாட்டும்
அழகமைந்த தென்றலார்
இசைந்துநீவும் புதியஆண்டின்
இனிமைகொள்ள எழுகநீ!

மாவின்தீபோற் றளிரில் மண்ணில்
வளர்ந்துநிற்கும் பசுமைசேர்
காவின்செடியிற் பூவிலன்புக்
காதல்கொண்ட அளியினின்
பாவிற்பக்கம் பழன மின்பப்
பறவைக்கானம் யாவிலும்
மேவிநிற்கும் விந்தைகாண
விழிதிறந்திங் கெழுகநீ!

அலையாற்ருளம் அடிக்குமாளி,
ஆறுவீணை மீட்டிடும்,
குலைகளென்னும் கும்பமேந்தி
கொண்டுதென்னை நின்றிடும்,
இலைகளென்ற கோலமிட்டு
ஏந்திநிற்கும் தீபமாய்
இலகும்ஏரித் தாமரைதன்
எழிலைக்காண எழுக நீ!

முற்றிடாத பனையி,லீந்தில்
முள்ளமைந்த செடிகளில்,
பற்றையாகித் தோன்றுதாழை,
பரந்தநாக தாளியில்,
கற்றையான காண்டைமுள்ளில்,
கானல்காய்ச்சு புல்லினில்,
உற்றவேற்ற உயர்வுகாண
உறங்கிடாதிங் கெழுகநீ!

கிளியினங்கள் கீக்கீயென்று
கிளர்ந்துபாடி எழுந்துவான்
வெளியிலாடும், குருவிக்கூட்டம்
விதந்துபாடும், தென்றலாம்
வளியிலெங்கும் மண்டுமின்பம்
வையமக்கள் வாழ்வினில்
களியையீயக் காத்திருக்குங்
கண்திறந்திங் கெழுகநீ!

நேற்றுநின்ற பழமையின்று
நீங்கியோட, மண்ணிடை
கூற்றுவன்றன் மேனியன்ன
கொடியகங்குல் அழியா,வ

ஏற்றிவைத்த விளக்கமாகி
இலங்குஞான சூரியன்
தோற்றுகின்ற இன்புகாண
துயிலைநீக்கி எழுகநீ!

ஆலயத்தின் மணியசைந்திங்
காத்மநாதம் ஆகிடும்,
சிலஅன்பர் பாடுகின்ற
தெய்வகீதப் பாகிஞல்
காலமோடச், கனிவு ஊறக்
கவினமைக்கும் காட்சியை
ஞாலமீது காணவுள்ளம்
நாடியின்றிங் கெழுகநீ!

சாதிபேதம் பேசுவோர்கள்
தாழ,விந்தத் தரணியில்
நீதியொன்ற, ஏதலர்க்கும்
நெறியையூட்டி, நேர்மையாம்
சோதிகாட்டி, தூய்மையாக்கித்
துயரமோட்டி, வாழவே
ஆதிநாதன் அன்புகொள்ள
அயர்வுநீக்கி எழுகநீ!

அன்புகூடில் வன்புமாளும்,
அருளும்நாடும், ஆசையாம்
துன்புவிடும், சுகமே மேவும்,
சோம்பலற்று வாழ்விலே
இன்புகூடும், எண்ணம்யாவும்
ஏற்றமாகும், நம்பியே
உன்புறத்து விழிவிலக்கி
ஊக்கமுந்த எழுகநீ!

உலகம்யாவும் ஒன்று; நம்மில்
ஒன்றுபட்ட கொள்கையே
நிலவிநிற்கில் நேர்மைநீதி
நெஞ்சுரங்கள் யாவுமே
குலவுமென்றும் கலகமற்ற
குணமிகுந்த இன்டமே
உலகிலோங்கும் உறுதிகாண
உவந்துநீயும் எழுகவே!

உயரினிட்டம் ஒன்றிநிற்கும்
உண்மையொன்றின் உதயமே
செயிரிலாத சீர்மையான
தேசியத்தின் வேரெனும்
பயனையின்று கண்டுவாழ்வில்
பற்றுளத்தில் நிற்கவே
அயர்வுபோக்கித் துயிலைநீக்கி
அன்பனேநீ எழுகவே!

எழுக வின்னும் உறக்கமேனே?
எழுகஅன்பு நெஞ்சுடன்
தொழுகநாதன் தூயபாதம்
சொல்கதெய்வ கீதமே
விழுககோவில் முன்றில்மேனி
வியர்வைநீராற் துயரினை
கழுவிநீயும் எழுகவெற்றி
கண்டிங்கின்பு கொள்ளவே!

# தலைவர்காள், ஒரு புத்தாண்டு வேண்டுகோள்

(சீ. என். பி.)

''ஓர் அரசியல் கூட்டமோ, ஒரு தொழிற்சங்க சம்மேளனமோ, ஒரு வியாபாரிகள் சங்கமோ, ஒரு மதஸ்தாபனமோ - எதுவாயிருந்தாலும் சரி, எல்லோருமே தங்களுக்குக், தங்களைப் பற்றி, தங்களுக்குள்ளே பேசிக்கொள்ளும் பாவத்துக்கு ஆளானவர்கள். ஜனநாயகக்கட்சியினர் ஜனநாயகக் கட்சிக் கூட்டங்களுக்குப் போகிருர்கள்; குடியரசுக் கட்சியினர் குடியரசுக்கட்சிக் கூட்டங்களுக்குத்திரளுகிருர்கள்; யூனியன் அங்கத்தவர்கள் தங்கள் யூனியன் கூட்டத்துக்குச்சமுகம்கொடுக்கிருர்கள்; முதலாளிமார்தங்கள் கூட்டத்துக்குப் போகிருர்கள். இக்கூட்டங்களில் எல்லாம் ஏற்கனவே தாங்கள் ஒத்துப்போகும் தலைவர்களையே பேசுவதற்கு அழைக்கிருர்கள். அவர்கள் பேசும் ஏற்கனவே தெரிந்த விஷயங்களைத்தான் கைதட்டிப் பாராட்டுகிருர்கள். எவராவது அவர்களின் கருத்தையும் நம்பிக்கையையும் ஆட்சேபிப்பதில்லை''

—சாப்பின் கொலின்ஸ்.

இலங்கையிலுள்ள நாம் மேற் கூறப்பட்ட பாவத்துக்கு ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிமிடமும் ஆளாகின்ருேம். யு. என். பி. காரர் யூ. என். பி. கூட்டத்துக்குப் போய் யூ. என். பி. தலைவர்கள் யூ. என். பி. கொள்கையை விளக்கிக் கூறும்போது, தொண்டை கிழியக்கத்தி ஆரவாரம் செய்கிருேம். இதைப் போலவே தமிழரசாரும் தமிழ்காங்கிரசாரும், இடதுசாரிகளும்-எல்லோரும்.

ஒவ்வொருகட்சி அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் அடிக்கடி ஒருவிதமான முகாந்திரமுமில்லாமல், ஏதாவதொரு நொண்டிசாக்குப்போக்கில், தங்கள் தலைவருக்கு ஒரு வரவேற்புக் கூட்டத்தை நடத்தி அவர் பேசுவதைக்கேட்டு, வெறிபிடித்தவர்கள்போல் ஆவே

(8-ம் பக்கம்பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்! போன்: 7067

ஞானம்ஸ் ஸ்ரூடியோ
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ எமது கிளை ஸ்தாபனத்தின் திறப்பு விழாவை விரைவில் எதிர்பாருங்கள்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு

ஆண்டி லொன்று கழிந்தது யாவர்க்கும்
ஆண்டி லொன்று மிகுந்தது மாந்தரே
மாண்டுபோன வருடத்து வாழ்வினை
மாறி வந்திடு மின்பதுன் பங்களை
ஈண்டு நீர் மறந் தேபுதி தெண்ணுவீர்
என்ற நல்லுரை யெம்மனத் தேயுறப்
பூண்ட பராபவவென் பேர் கொடு
புக்கு நின்றபுத் தாண்டு புகன்றதே.

★

கொண்ட பச்சிலை முற்று முதிர்த்தபின்
கோல நற்றளிர் கொள்தருப் போலநாம்
மண்டி நெஞ்சகம் மாசுறச் செய்திடும்
வாது சூதுகள் வஞ்சனை பொய்மைகள்
கண்ட கற்றியெந் நாளுநல் லன்பொடு
காணு நல்லற மென்றும் நிலைத்திடத்
திண்டிறல் தருஞ் செய்கை தொடங்குவோம்
சேர்புத் தாண்டது செய்தியி தென்னவே.

— கதிரேசன்

## பணம் எண்ணும் அற்புத இயந்திரம்

காகித நோட்டுகளையும், பில்களையும், தானே எண்ணக்கூடிய 'ஆட்டோமாட்டிக்' இயந்திரம் ஒன்றை ஜப்பான் கண்டுபிடித்துள்ளது.

'பில்கோன்-இ' என்று அழைக்கப்படும் இந்த இயந்திரம் பணத்தை விரைவாகவும் சரியாகவும் எண்ணிவிடும்.

ஒரு கட்டு நோட்டுகளை இந்த இயந்திரத்தில் நுழைத்தால் 10 விநாடிகளில் 100 நோட்டுக்களை எண்ணிவிடும்.

அத்துடன் 100, 50 வெள்ளி நோட்டுக்களையும் மற்ற நோட்டுக்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்துவிடும். கிழிந்துபோன நோட்டுக்களையும் இந்த இயந்திரம் தனியாகப் பிரித்துவிடும்.

தாழ்வு மனப்பான்மை பற்றி ஒரு புதுக் கண்ணோட்டம்

# தாழ்வாய்; உயர்வாய்!

ஜெர்ட்ரூஸ் லாரென்ஸ், ஒரு அழகான பெண்! அவள் அப்பா ஒரு பாடகர்; குடிகாரர்!

அந்த நிலையில் அவள் தன் தகப்பனருடன் வசிக்கத் தொடங்கினாள். தகப்பனார் எப்பொழுதும் 'மேல் உலகத்தில்' தான் குடித்துவிட்டு இருப்பார்.

இக்கொடூரமான தனிமையை அனுபவித்துவந்த அவள், ஒரு அமெச்சூர் நாடகசபையில் சேர்ந்தாள். வயது பதின்மூன்றானாலும், இருபது வயதுள்ள காதலி வேடம் தான் வந்துசேரும்!

கீச்சுக் குரலில் அவள் நடித்த காதலி வேடம் நன்றாகவே இருந்தது. என்றாலும் நாடகப்பொறுப்பாளர் வேண்டுமென்றே இவளுக்குக் 'குரலும் சரியில்லை, உடலும் சரியில்லை, நடிப்பும் அவ்வளவு பிரமாதமில்லை' என்று கூறிவிட்டார். தன்னைப் பற்றித் தானே குறைவாக நினைத்துக்கொண்டு திறமையை வருந்தி வரவழைத்துக் கொள்ள விரும்பினாள். அவளும் பல பல துன்பங்களை ஏற்றுக்கொண்டு வீட்டுக்குள்ளேயே கிடந்தாள். தன் இயலாமையை எண்ணி எண்ணிப் பொருமினாள், குரலை மாற்றிக்கொண்டாள், காலத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தாள்!

அவள் காத்திருந்த காலமும்வந்தது. தன்னம்பிக்கையுடன் எப்படியோ பெர்னாட்ஷாவின் புது நாடகத்தில் நடித்தாள். அவள் ஏற்றிருந்த பாத்திரம், கொடுமைகளைத் தாங்கும் இளம்பெண்ணின் பாத்திரம்! எனவே, அனுபவபூர்வமாக நடித்தாள்.

இப்போது அவள் தலைசிறந்த நடிகையாக விளங்குகிறாள்.

ஃ ஃ ஃ

அலங்கார மேடைக்குவந்தான், இத்தாலிநாட்டு அஞ்சலோ சிசிலியானோ என்ற இளைஞன். 72 டன் இரும்புக்குண்டுகளை வரிசையாகக் கோர்த்து இழுத்து எறிந்தான். எப்படித்தான் இவ்வுடலை இவ்வளவு ஒழுங்காக அழகாக வளர்த்தானோ என்று மக்கள் எண்ணி யெண்ணி வியந்தனர்.

ஆனால் இந்தப் பயில்வான் தன் இளமையில் எப்படியிருந்தான் என்பது பலருக்குத் தெரியாது! 'பேடி! பல்லி கத்தினால்கூடப் பயந்து நடுங்கும் கோழை!" என்று பெற்றோரும் மற்றோரும் சலித்துக்கொண்டு பரிதாபப் பெருமூச்சுவிடும்அளவிற்கு இருந்தான்.

## —ராஜகோபால்—

அன்றொருநாள், பயில்வானை அஞ்சலோ சிலையருகில் நின்றுகொண்டிருந்தான்.

நண்பர்கள் வந்தனர்!

கேலிபுரிந்தனர்!

— நண்பர்களின் கேலி நிறைந்த இந்த 'அவமான வேல்கள்' அவன் நெஞ்சைக் குத்திப் பிளந்தன.

தன் ஆசையை வளர்த்துக்கொண்டு 'திருப்தி'யைக் கொன்றான்; தன்னம்பிக்கையுடன் தன் உடலை வளர்ப்பதில் கவனங்கொண்டான்; இந்த நிலைக்கு வந்தான்!

ஃ ஃ ஃ

'ஆகா, என்ன பேச்சு வன்மை! என்ன கருத்து வலிமை!'

— என்று எல்லோரும் நினைத்து வியக்கும்படி எதைப் பேசினாலும், எத்தனை நேரம் பேசினாலும் சுவையாகப் பேசுகிறார்ஐயா இந்த நார்மன். வி. பியலே!
— என்று புகழப்படுகிறார் இவர் — இன்று! ஆனால் இவரே அன்று திக்குவாயர்!

'டேய், ஊமையா! நீ வேறே பேச வந்துவிடுகிறாயடா!'

'பேசாமல் இருப்பதற்கு என்ன கேட்கிறாய்?' — என்று நண்பரும் மற்றவரும் கேட்டார்கள்!

அவருக்குத் தன் 'குறை' தெரிந்தது. அதை நீக்கினார்; முன்னேறினார்

ஃ ஃ ஃ

அன்று இரவு நெடுநேரம் வரை அந்தச் சின்னஞ்சிறு உள்ளம் ஜன்னல் வழியாக அடுத்த வீட்டில் நடக்கும் கோலாகலத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தது. தான் போக முடியாது என்று அம்மாவின் மூலம் அறிந்த அந்தப் பெண் மிக வருந்தினாள்.

தன் வறுமையெனும் 'குறை'யை அந்தப் பிஞ்சு உள்ளம் உணர்ந்து அதைப் போக்கிடத் தன்னம்பிக்கையுடன் பலப்பல வழிகளில் சம்பாதிக்கத் தொடங்கிற்று. பொருள் குவிந்தது. கணவனும் பெரும் பணக்காரனாக வந்துசேர்ந்தான். இப்போது அந்த ஊரிலேயே பெரிய பணக்காரக் குடும்பம்எல்சாமேக்ஸ்வெல் எனும் இந்தப் பெண்ணுடைய குடும்பம்தான்!

— வாழ்க்கையில் அடிக்கடி சந்திக்கும் ஐந்து பேர்களை மேலே சந்தித்தோம். அவர்கள் தங்கள் லட்சியங்களை அடைந்துஇன்புற்றதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய இளமைப் பருவத்தில் எழுந்த தாழ்வு மனப்பான்மையாகும். இந்த உண்மைகள் விதிவிலக்கான கற்பனைக் கதைகளன்று; உலகத்தை இயக்கிவரும் விதிகள்!

தாழ்வு மனப்பான்மை கொள்ளாதவன் முன்னேறியதுமில்லை.

அவையாவன:

தாழ்வு மனப்பான்மை கொள்ளாமலே முன்னேறியதும் இல்லை.

ஒவ்வொருவரும் தாழ்வு மனப்பான்மை கொண்ட பிறகே முன்னேறுகிறார்கள்.

உடை இல்லாத் திண்டாடியவன் நேரத்திற்கொரு உடை மாற்றிக் கொள்ளுபவனாக மாறியிருக்கிறான்.


—முட்டாள் என்று பட்டம் சூட்டப்பட்டவன் சிந்தனைச் சிற்பியாக மாறியிருக்கிறான்!

(7-ம் பக்கம் பார்க்க)

உங்கள் அனைவர்க்கும்
எங்கள் புதுவருட வாழ்த்துக்கள்
தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.
GOLD HOUSE
Cables: JEWELLERS. Dial: 281.

யாழ்ப்பாணம்
சுபாஸ் கபே & விடுதி வீடு
உரிமையாளர் திரு. A. சங்கரன் அவர்கள் தமது வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மங்களகரமான புதுவருட வாழ்த்தை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

ஆதரவாளர்களுக்கும்
வாடிக்கைக் காரர்களுக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
(ஸ்தாபிதம் : 1918
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537. தந்தி: "லக்ஷ்மி"

பண்டிகை பருவத்தை கொண்டாடி மகிழ
ஏற்ற

இசைத்தட்டுகள்
இசைக் கருவிகள்
றேடியோக்கள் அம்பிளி
பயர்கள் மற்றும் மின்சார
சாதனங்களுக்கு
நம்பகமான ஸ்தாபனம்
S. சுலைமான்கண்டு & பிறதர்
(மொம்சாக் கட்டிடம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்!
பாரத் ஸ்ருடியோ
போன்: 252
(படம் பிடிப்பவர்கள்)
கஸ்தூரியார் வீதி, ::: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டும் புதுவாழ்வும்

—ஆர். பி. ஹரன், கோப்பாய்—

உலகிலே மானிடப் பிறவியை எடுத்திருக்கும் நாம் அதன் பயனை அடைய முயற்சித்தல் வேண்டும். நாம் பிறந்தநாள் முதல் இறக்கும் நாள் வரை உண்டு, உடுத்து உழைத்துச் சம்பாதித்து பிறவியினருமையை யறியாது, கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும் வறிதே ஓரறிவு, ஈரறிவு படைத்த ஆன்மாக்களைப்போல காலத்தைக் கழித்துவருகின்ருேம். நம்மைப் பற்றியோ அன்றி நம்மைச்சிருஷ்டித்த இறைவனைப்பற்றியோ சிறிதேனும் சிந்திப்பதில்லை.

தற்காலம் உலோகாயதம் எனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம் பரவி நாத்திகம் பேசுபவர்கள் பெருகிவருகின்ருர்கள். மக்கள் பத்தியில் மத நம்பிக்கை, தேசிய உணர்ச்சி அருகிவருகின்றன.

எங்கு நோக்கினும் ஜாதிப் பிரிவினை, மதப்பிரிவினை கட்சிப்பிரிவினை பேசும் காலமாக மாறிவிட்டது.

உலகிலே கல்வியறிவு, நாகரீம் முதலியன பெருகிக்கொண்டே வருகின்றன. ஆனல் அதே நேரத்தில் கற்றும் அறிவற்றவர்களாக மக்கள் மொழிவெறி, இன வெறி, மதவெறிகொண்டவர்களாகவே வாழ்கின்றனர். வள்ளுவப்பெருந்தகை கூறுகின்ருர்,

''கற்றதனுலாய பயன்
என்கொல்? வாலறிவன்
நற்ருள் தொழாரெனின்;''

ஆகவே கற்றதன் பயன் இறைவனது நற்றிருப் பாதங்களைத் தொழுதலே யாகும். அதுமாத்திர மன்று.

''சென்றது காலம்
சிதைந்தது இளமை
நின்றது சாவென்று
நினைந்துருகி - மன்றில்
நடிக்கின்ற பால் வண்ணர்
நாமம் எண்ணுமாந்தர்
படிக்கின்ற நூல்
எல்லாம் பாழ்''

என்கிருர் அதிவீரராம பாண்டியர்.

ஆனதன்மையினுலே கற்றதன் பயனுகிய இறைவழி பாட்டைக் கற்றவர்களும் மற்றவர்களும் முக்கிய கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

இறைவன் தன்னை வணங்கும்படியாகச் சிரசினையும், தன்புகழினைப் பாடும்படியாக நாவினையும், தம்மை நினைப்பதற்கென நெஞ்சத்தையும் தந்துள்ளான்.

''வைத்தனன் தனக்கே
தலையும் என்நாவும்
நெஞ்சமும்; வஞ்சம் ஒன்று
இன்றி
உய்த்தனன்; தனக்கே''

என்றுபாடுகிருர் சுந்தரமூர்த்திசுவாமிகள்.

''வாழ்த்தவாயும் நினைக்க
மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும்
தந்ததலைவன்''

என்பது நாவுக்கரசர் நல்வாக்கு.

எனவே நாம் ஆலயஞ்சென்று இறைவனைவாழ்த்தி வணங்கிடல்வேண்டும்.

நம்மையெல்லாம் படைத்து, காத்து, அழித்து, வாழவைத்து, சராசரங்கள் அனைத்திலும் வியாபித்திருக்கும்படியான இறைவனை ஏன் வாழ்த்தவேண்டும்? நாம் வாழ்த்தியா அவர் வாழப்போகிருர்? என்றெல்லாம் இவ்விடத்தே நம்மிடையே கேள்விகள் எழுவதுஇயல்பு.

இறைவன் விறகில் தீபோலவும் பாலில் நெய்போலவும், எள்ளினுள் எண்ணெய் போலவும். உயிருக்குள் உயிராகவும் ஊடுருவி விளங்குகின்ருன்.

''உரைசேரும் எண்பத்து
நான்குநூருயிரமாம் யோனி
பேதம்
நிரைசேரப்படைத்த அவ
ற்றின் உயிருக்குயிராய் ஆங்
காங்கே நின்ருன்''

என்று இறைவியாபகம் பற்றிப்பேசுகிருர் ஞானசம்பந்தமூர்த்திகள்.

ஆகவே உயிருக்குயிராய் மூலகாரணனுய் விளங்கும் அமலனை வாழ்த்தினுல் சகல உயிர்களும் வாழ்ந்திடும்.

இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

'மலர்மிசை யேகினுன்
மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்''

என்று கூறுகிருர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஊதடா சங்கம்

— சக்தீ - அ. பாலையா —

அன்பென்று ஊதடா சங்கம் - அதில்
அன்பெனுஞ் சக்தீ எழுந்திட ஊது
அன்பென்று முழங்கடா முரசம் - அதில்
ஆயிரம் ஆயிரம் விழித்தெழவேண்டும்

துன்பமகலவும் வேண்டும் - உண்மை
தோய்ந்த சுதந்திரம் பிறந்திடவேண்டும்
இன்பமலர்ந்திட வேண்டும் - தொழில்
ஏற்றம் சிறந்து தெளிவுற வேண்டும்

பண்பு பெருகிட வேண்டும் - தமிழ்ப்
பாருலகெங்கும் செழித்திட வேண்டும்
விண்புணர் தத்துவம் யாவும் - வையம்
மேவக் கொணரும் கலைபல வேண்டும்

காதலுங் கருணையும் வேண்டும் - வாழ்வு
கற்பெனும் நெறி பிறழாமையும் வேண்டும்
மேதகு செயல் திறம் வேண்டும் - ஆக்கம்
மேலாம் வலிபெறச் செல்வமும்வேண்டும்

ஆய்ந்து தெளிந்திட வேண்டும் - நன்மை
அளிப்ப தெதுவென்றுணர்ந்திடவேண்டும்
மாய்ந்து மறைவதானுலும் - அதன்
மர்மமெதுவெனக் காணுதல் வேண்டும்

சிவகாருண்யமும் வேண்டும் - அன்பு
சூழும் அறிவுச் சுடர் ஒளி வேண்டும்
ஏவல் பணிவிட வேண்டும் - இங்கு
யாவரும் சமமென வாழவும் வேண்டும்

எத்தொழில் செய்யினும் என்ன - அவை
யாவுஞ் சிறந்ததொழிலெனக் கொள்வோம்
சுத்தமாய் வாழப் படைப்போம் - வஞ்ச
சூதெனில் வாதெனில் மண்ணில் துடைப்போம்

சத்திய சித்தமே கொள்வோம் - இந்தத்
தாரணி மீது ஜயங்கொண்டு வாழ்வோம்
நித்திய இன்பமே வாழ்க்கை - எனும்
நெறியை அறிந்திங்கு நம்மை நாம்
ஆள்வோம்

யாவும் நிறைவதும் சக்தி - அதை
யாமும் எம்முள்ளும் புறத்தினும்கண்டு
பூவிற் பிறந்த பயனை - விண்டு
புகழும் தழைத்திட வாழுவோம் ஒன்று

எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

செல்லம்ஸ்

யாழ்ப்பாணம்

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வடமாகாணத்தில்

சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்)

இணைப்பதிலும்

றெடிமேட் உடுப்புகள் தயார் செய்வதிலும்

முதன்மை வாய்ந்த ஸ்தாபனம்

அன்னம்ஸ் சாறி வேக்ஸ்

27/1 மின்சார நிலைய வீதி, :-: யாழ்ப்பாணம்.

(விக்னேஸ்வரா மேல்மாடி)

அன்பர்கள் ஆதரவாளர்க்கும் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

புது வருட வாழ்த்துக்கள்!

கணேசானந்தாஸ்

ஜவுளி மாளிகை

(முட்டாசுக்கடைச் சந்திக்கருகாமையில்)

208, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது

புதுவருட வாழ்த்துக்கள்!

அஜந்தாஸ்

பிடவை மாளிகை

172, கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

கிளைஸ்தாபனம்: புஷ்பராணி ஸ்ரோஸ

பாங்ஷால் வீதி, :-:-: யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

லீயோடெக்ஸ்

வீவிங் இன்டஸ்றீஸ்

(பிரபல கைத்தறி நெசவாளர்கள்)

45, ஜும்மா மொஸ்க் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

# வாழ்வில் ஓர் ஆண்டு; வரலாற்றில் ஒரு ஏடு

— செல்வி க. பூரணம் —

கடும் குளிர், கடும்வெயில்; அயராத உழைப்பு! அதனுல் உள்ளம்சலித்தோர்க்கு ஆறுதலளிப்பதுபோலஇளம் தென்றல் அசைந்து அசைந்து வருகிறது. சித்திரை நங்கையின் உதயம் எல்லோரையும் மகிழவைக்கிறது. வீட்டிலே வளைநெல் குவிந்திருக்கிறது வேண்டிய பண்டங்கள் நிறைந்திருக்கின்றன, பழைய வேலிகள் மறைந்து புதியவேலிகள் விரிந்திருக்கின்றன- பழமணல் அகற்றிப் புதுமணல் பரவப்பட்டிருக்கின்றது- பழைய உடைந்த ஒட்டைக் கலசங்கள் இருந்த இடத்தில் வெள்ளிக்கலசங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன- வீடுவாசல்கள் கூட்டிப்பெருக்கி புதுமெருகிடப்பட்டிருக்கின்றன- முன்றல் வர்ணக்கோலம் முழுவீட்டிற்கும் கோலம் செய்கிறது-

வீட்டில் நிகழும் திருப்பங்களைக் கண்ட கொஞ்சிடும் குழவி குதூகலம் தாங்காது ''அம்மா! அம்மா! என்னம்மா! இன்று'' எனத்தாயின் முந்தானையைப் பற்றுகிறது. ''இன்றுபுதுவருடமடா! புத்தாண்டைப்புன் சிரிப்போடு இப்படி வரவேற்ருல் என்றும்மகிழ்வாய்வாழலாம். இனி புதுப்பட்சணம், புதுச்சொக்காய் இதோ அப்பா வாங்கி வந்திருக்கிருர். மருத்துநீர் வைத்து [illegible] என்று அன்பு பொங்கித்ததும்பிட, இருசொட்டுஆனந்தக்கண்ணீர் கண்களிலிருந்து சிந்த அன்னை பதில்சொல்கிருள்.

வாடிய மரங்களெல்லாம் இளந்தென்றலைக்கண்டு புன்னகை செய்வதுபோல தங்கள் மொட்டுக்களையெல்லாம் முகிழச்செய்திருக்கின்றன. எங்கும் நறுமணம் கமழ்கின்றன. குயில் கூ! கூ! என இனிய ஓசை எழுப்புகிறது. இவ் இயற்கையின் அழைப்பிகழைக் கேட்டுப் பராபவநங்கையும் பளிச்சிடும் பற்களை மெல்லக் காட்டி புன்சிரிப்புடனும், பணிவுடனும் வரவேற்பினை ஏற்றுக்கொண்டு வருகை தருகிருள்.

பராபவநங்கைக்கு அளிக்கும் வரவேற்புக்களை உன்னிப்பாய்க் கவனித்த உயர்ந்த நங்கையாக, மக்களால் போற்றப்படும் விசுவாவசு நங்கை தனது ஆட்சியை பராப்வத் தங்கையிடம் கையளித்துவிட்டு மெல்லத் தன்னிருப்பிடம் திரும்புகிருள். தனிவழிசெல்லும் அந்நங்கை தனது கடந்த கால ஓராண்டு ஆட்சியில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவேட்டில் புரட்டிப் பார்க்கிருள். செல்லும் வழியில் சிலர் பேசும் பேசுச்சுகள் அவள் உள்ளத்தைப் பூரிக்கச்செய்கின்றன ''விசுவாவசு வருடம்என்ற பெயரைக்காப்பாற்றி விட்டாள் [illegible]வாச நங்கை. ஈழத்திருநாட்டில் சிதறிக்கிடந்த மக்களை சேர்த்துவைத்திட வழிகோலிய பெருமை அவளுக்குத்தான் உரியது. பிறக்கும் போதே சிங்கள-தமிழ்-முஸ்லிம் இனமக்கள் ஒன்ருக இணைந்து பெருவிழாக் கொண்டாடும் வண்ணமே பிறந்தாள். இலங்கையில் மட்டுமன்றி உலகத்திலும் சமாதானம் நிலவ வழி செய்தாள். போர் முரசம் அதிர, பெரும்போர் செய்த இந்திய-பாகிஸ்தான் இணைந்திட, டாஷ்கண்ட் பிரகடனம் இந்நங்கையின் வாழ்நாளில் தான் இடம்பெற்றது. மக்களால் போற்றப்படும், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்'எனப்பலர் போற்றுதலோடு சிலர் தூற்றுதலும், அந்நங்கைக்குக் கேட்கிறது. 'இன்றேடு இவள் தொலையட்டும். இனி மேலாவது எங்களுக்கு நல்ல காலம் பிறக்கும்' என ஏங்கினர் அச்சிலர். விசுவாச நங்கை இவற்றைச்சட்டை செய்யவில்லை. போற்றுபவர் போற்றட்டும், தூற்றுபவர் தூற்றட்டும். எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாது, அறவழி நின்று ஆக்க வழியில் எனது காலத்தில் உழைத்தேன். இனிவருவோரும் என் வழி பின்பற்றினுல் மக்கள் மன அமைதியுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வர். உலகமும் சுபீட்சமடையும். போய்வருகின்றேன்' என்று விசுவாச நங்கை விடை பெற்றுக்கொண்டாள். பராபவ நஙகை ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராபவ வருஷ

## உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

ஸ்ரீ பராபவ நாம வருஷம் 1927-ம் ஆண்டில் ஆரம்பித்த புதிய அறுபதாண்டுத் தொடரில் 40-ம் வருடமாக வருகின்றது இப்புத்தாண்டு நமது உலகுக்கு அளிக்க இருக்கும் பலன்களை ஆராயப் புகுமுன் ஆண்டுப்பிறப்பினையும் இதரமுக்கிய அம்சங்களையும் ஆராய்வாம்.

புத்தாண்டானது விசுவாவசு வருஷ பங்குனித் திங்கள் 31-ம் நாள் புதன் கிழமை முன்னிரவு 35 நாடி 2 விநாடியில் (இரவு 8 மணி 10 நிமிடம்) அபரபட்ச நவமித்திதியில், உத்தராட நட்சத்திரம் 4-ம் பாதத்தில். சித்தநாம யோகத்தில், தைதிலம் கரணத்தில், துலா இலக்கினத்தில், மிதுன நவாம்சத்தில் புதன்காலதுறையில், தாமத குண வேளையில், நட்சத்திரப் பட்சியாய கோழி சாவுத் தொழிலும் சூக்குமப்பட்சி நடைத்தொழிலும் செய்யுங்கால் பிறக்கின்றது அன்று 25 நாடி 12 விநாடி முதல் (மாலை 4 மணி 10 நிமிடம்) இரவு 45 நாடி 12 விநாடி வரை (14-4 66 — 12-10) காலை விஷு புண்ணிய காலமாகும். இவ்வாண்டுப் பிறப்பின்போது மக்கள் விதிப்படி சங்கற்பித்து ஆண்டுப்பிறப்பிற்கு வழமை போல் கையாளவேண்டிய சகல முறைகளையும் கையாண்டு உற்றார் நண்பருடன் கூடி கொண்டாடி இரவு சயனம் செய்து மறுதினம் பராபவ வருஷ சித்திரை 1-ம் நாள் வியாழக்கிழமை வைகறைத் துயிலெழுந்து பொங்கலிட்டு வழிபாடாற்றி வாழ்வாராக. இப்பிறப்பின் காரணமாக கார்த்திகை, மிருகசீரிடம், 3ம், 4-ம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம், 4-ம் கால், உத்தரம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் 1-ம, 2 ம் கால்கள் ஆதியவற்றில் பிறந்தவர்கள் தவறாது தானதரும வழிபாடுகளை விசேடமாகச் செய்க.

### நவ நாயகர்

புத்தாண்டுப் பிறப்பின் காரணமாக இவ்வாண்டில் புதன் இராசாவாகவும், பிரதமமந்திரியாகவும் வருகின்றார் வியாழன் தானியாதிபதியாகவும் சந்திரன் இரசாதிபதியாகவும் வர, பாபிகளான செவ்வாய் சேனாதிபதியாகவும் அர்க்காதிபதியாகவும் மேகாதிபதியாகவும் வருகின்றார் மற்றொரு கொடிய கிரகமாகிய சனி, ஸஸ்யாதிபதியாகவும் நீரசாதிபதியாகவும் வருகின்றார் இந்த நிலையில் முக்கியத்துவமுடைய சூரியன் இம்முறை நவநாயகர் மந்திரி சபையில் இடம்பெறவில்லை சுபக்கிரகமான வெள்ளியும் இம்மந்திரிசபையில் இடம்பெறவில்லை.

புதன், இராசாவாகவும் மந்திரியாகவும் வருவது காரணமாக சுழிமழை. அதிககாற்று. சிறுதானிய விளைவு. சனங்கள் பாபத் தொழிலில் ஈடுபடுதல், சனங்களுக்குப்பயம், எழுத்தாளர்களுக்கு நன்மை, வைத்தியர்களுக்கு மேன்மை, ரோகபீடை முதலியன பலன்களாக வருகின்றன செவ்வாய் சேனாதிபதியாகவும் அர்க்காதிபதியாகவும் வருவதால் நன்செய் பயிர்கேடு. சிறுதானிய விளைவு, அக்கினி - ஆயுத பயம், ரோகபீடை மனப்பீடை, இராச விரோதம், சுழிமழை, பயிர் விருத்தி, செய்தானியமலிவு. அகவிலை ஏற்றம், பசுக்களுக்குநோய். வாகனச் சரக்குகளுக்குக் கேடு, கலகம் உண்டாம்.

சனியின் ஆதிபத்தியம் காரணமாக இரும்பு, ஈயம், கருந்தானியம் கரும் பொருட்கள் விலைமலிதலாக இருக்கும். வியாழன் ஆதிபத்தியம் காரணமாக தேசமெங்கும் நல்மழை, சூல பயிர்களும் பூரணபலிதமாகவும் சகல தானியங்களும் விலைமலிவாகவும் பசு பால்-நெய் விருத்தியாகவும் இருக்கும் சந்திரன் ஆதிபத்தியம் காரணமாக தானிய மலிவு, பிரசைகளுக்கு ஆரோக்கியம், எண்ணெய்வகை-தேன்-பால்-தயிர்-இரசம் முதலியன மிகுதியாகும். இவ்வாண்டில் முன்மழை குறைவு, பின்மழை அதிகம். காற்று அதிகரிக்கும். சுழிமழை காரணமாக தானியக்கேடு, நாட்டில் பலவிதமான கஷ்டங்களும் சம்பவித்தல் ஆதியன உண்டாம்.

### உலக பலன்

உலகில் சுபீட்சம் அதிகம் காணமுடியாது. வர்த்தகம் உலகில் பாதிக்கப்படும் பல இடங்களிலும் புதிய சச்சரவுகள் ஆரம்பிக்கும். ஆட்சியிலிருக்கும் கட்சிகள் போட்டி பெருகும். மேடத்தில் இருந்த செவ்வாய் ஆண்டு முடிவில் துலாத்திலிருந்து கன்னிக்கு வக்கிரமாகின்றது. இதற்கிடையில் இடபத்திற்கு 5-5-66 ல் செல்லும் செவ்வாய். இராகுவுடன் கூடி 7-7-66 வரை இருக்கும் இந்நாளில் இராகு மேடத்திற்குச் செல்லும். 30-6-66-ல் செவ்வாய் மிதுனத்துட் பிரவேசித்து வியாழனுடன்கூடி 4-10-66 வரை இருக்கும். இதன்பின் செவ்வாய் கடகத்திற்கு மாறும். வியாழனும் கடகத்திற்கு மாறுகின்றது இம்மாற்றம் 16-8-66-ல் நிகழும். இதன்பின் 4-10-66 ல் சிங்கத்திற்குச் செல்லும் செவ்வாய், சனியை எதிர்நோக்குகின்றது. 25-11 66-ல் கன்னிக்குச் செல்லும்.

செவ்வாய் - இராகு சேர்க்கை, செவ்வாய்-வியாழன் சேர்க்கை, செவ்வாய்-சனி எதிர்நோக்கல் ஆகிய பலன்கள் காரணமாக அவ்வக் காலங்களில் உலகில் அமளிதுமளி நடக்கும் வைகாசியில் சூரிய கிரகணம் வரும்போது. செவ்வாய் இராகுவுடன் கூடியிருக்கும். இக்காலத்தில் ஈழநாட்டின் அரசியலிலும் நெருக்கடி காணப்படும். இக்காலத்தில் இடப இலக்கின ஆதிபத்தியம் கொண்ட இராணுவத் தன்மையுடைய ஒருவர் உயர் பதவிக்கு வரக்கூடிய சான்றுகள் இருக்கின்றன. இக்காலம் முதல் 1967 மார்ச் முடிய உலகில் அவ்வப்போது மாற்றங்களும் குழப்பங்களும் நடக்கும்போது இலங்கையிலும் பலவித குழப்பங்களும் நடக்கும். இலங்கையில் மத- அரசியல் - சமுதாய குழப்பங்களுக்கு இடமுண்டாகுமென்பது கோள்களது கூற்று இக்காலத்தில் அமெரிக்கா, இத்தாலி, ருஷியா, சீனு, இந்தியாவின் எல்லையோரங்கள். பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா, ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் எல்லாம் அரசியல்-உள்நாட்டு கொந்தளிப்புகள் இருக்கும் ஜப்பானில் இயற்கையால் விபத்துக்கள் முதலியன ஏற்படுவதுடன் அழிவுகளும் காணப்படும். உலக அமைதியைக் குழப்புவதில் சீனு முன்னணியில் நிற்கும். இந்தியா-பாகிஸ்தான் சச்சரவு இவ்வாண்டில் மீண்டும் தொடரும் புத்தாண்டுடன் ரோடீசியா எல்லையில் குழப்பம் ஆரம்பிக்கும். சூரிய கிரகண காலத்தில் அமெரிக்க ஜனுதிபதியின் உடல் நலத்தைப் பேணவேண்டும்.

புத்தாண்டில் இடபம், சிங்கம், துலாம், மகரம், கும்பம் இராசியாளர் சுபபலன்களையும், மேடம், கடகம், விருச்சிகம் மத்திம பலன்களையும், இதர இராசியாளர் கஷ்டபலன்களையும் அனுபவிப்பர் அவர்கள் வருவாய் வெகுவாகப் பாதிக்கும்.

### இராசிப் பலன்

மேட இராசியாளருக்கு முதல் நான்கு மாதத்தில் உத்தமபலனும் இடை-கடையில் மத்திம பலனும் நடக்கும். பொதுவாகஇவர்களுக்குப்பூரணசுகம். மகிழ்ச்சி தெய்வானுகூலம், அதிகாரம், கீர்த்தி, தொழில் பலிதம், நண்பர் உதவி, இடையிடையே ரோகபயம், காரிய சித்தி, இலட்சுமீகரம், தன தானிய லாபம், நல்லோர் கூட்டம், திரவியலாபம், சரீர சுகம் காணப்படும்.

இடப இராசியளருக்கு இவ்வாண்டில் வருவாய் அதிகரிப்பு, நற்சுகம், காரியானுகூலம். தனதானியலாபம். இனசனக்கூட்டம், இடைக்காலத்திலும் கடையிலும் காரிய பலிதம், தொழிற் சிறப்பு, பொருள்வரவு, சொத்துச்சேர்க்கை, நற்பலன் அதிகம் காணப்படும்.

மிதுன இராசியாளருக்கு இவ்வாண்டில் பொருள் நட்டம். செய் தொழிற் கேடு, கடன்பயம், பொருட்செலவு, சொத்துச் சேதம், அற்ப பலன், பிரயாசமிகுதி காணப்படும்.

கடக இராசியாளருக்கு இவ்வாண்டில் சமசுகம், பொருள் வரவு, செலவு சமமாதல், ஆண்டின்முற்பகுதியில் பூரண சுகம், பொருள் வரவு, மகிழ்ச்சி, தெய்வானுகூலம், நடுப் பகுதியும் கடைப்பகுதியும் குறைந்த பலனும்காணப்படும்.

சிங்க இராசியாளருக்கு இவ்வாண்டு அதிகலாபப் பெருக்குண்டு. இவர்களுக்கு முற்பகுதியில் பூரணமான நற்பலன்கள்-இலட்சுமீகரம்-செல்வச் செழிப்பு, இனசனக்கொண்டாட்டம், இடைக்காலத்திலும் கடைசிலும் பொருட் சேதம் காணப்படும்.

கன்னி இராசியாளருக்கு பெரும்பொருள் நட்டம் உண்டு. சித்திரை முற்பகுதியில் பிறந்தவர்களுக்கு தேகரோகபீடை, கடன் பயம், சஞ்சலம் உண்டு. மற்றவர்களுக்கு மத்திம பலன் நடக்கும்.

துலா இராசியாளருக்கு இவ்வாண்டு மத்திம சுகம் உண்டு. விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு உதவி பொருள் விருத்தி. தொழிற் சிறப்புண்டு மற்றவர்களுக்கு மத்திம பலிதமாகும்.

விருச்சிக இரசியாளருக்கு இவ்வாண்டு மத்திம பலிதம் காணப்படுகிறது. தனு நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நடுப்பகுதியிலும் கடைசியிலும் அவதானமாக நடப்பது முக்கியமாகும். மற்றும்படி இவர்களுக்கு தொழில் சமபலிதம், நண்பர்கள் உதவி, இடையிடையேரோக பயம் உண்டு.

தனு இராசியாளருக்கு இவ்வாண்டு பொருள் நட்டம் இருப்பினும், தொழிலில் வருவாய், பூரணசுகம், அதி[illegible] சரீரசுகம் காணப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)


ஆதரவாளர்களுக்கும் வர்த்தக அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த

புதுவருட வாழ்த்துக்கள்!

சாமி அன் சன்ஸ்

[எவர்சில்வர் மொத்த சில்லறை வியாபாரிகள்]

(உரிமையாளர்: சி. கந்தசாமி)

163, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

பட்டுச் சேலைகளுக்கும் உயர்ந்தரக புடவைகளுக்கும்

விஜயம் செய்யுங்கள்

முனீர்ஸ்

79—81, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கைக்காரர்களுக்கும், அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த

புதுவருட வாழ்த்துக்கள்!

V. K. இராசரத்தினம்

(றேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும்)

11/5 ஸ்ரான்லி வீதி, -:- யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது புது வருஷ நல்வாழ்த்துக்கள்!



நீடித்து உழைப்பது

சொனென்ஷீன்

பற்றறி ஒன்றே


ஜெர்மன் தயாரிப்பு

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

துரை அன் கோ

23/2, ஸ்ரான்லி ரோட். -:;- யாழ்ப்பாணம்.

வந்துவிட்டது!




நீங்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்த

கிறவுன் (CROWN) ரான்ஸிஸ்டர் றேடியோ.

விசேஷ அம்சங்களுடன்

- டபிள் ஸ்பீக்கர்
- எட்டு ரான்ஸிஸ்டர்
- ரியூனிங் பற்றி இன்டிக்கேற்றர்
- இழுத்து நீட்டக்கூடிய ஏரியல்
- மரப்பெட்டியிலான கெபினெற்
- மூன்று டோச் பற்றியில் இயங்கக்கூடியது.

இன்றே விஜயஞ்செய்யுங்கள்!

ஏஜன்ட்ஸ்:

அப்துல்லா அன் கோ.,

127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 486

உங்களுக்குத் தேவையான சகலவிதமான நவீன உயர்தர


றெடிமேட் உடுப்புகள்

விலை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பென்ஸி றெடிமெட் ஸ்ரோர்ஸ்

8, பெரியகடை, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

றேடியோ
திருத்துவதில்
நிபுணத்துவம்
வாய்ந்தவர்கள்

ஈஸ்வர் கோப்பறேஷன்

(வட ரகாணத்தில் றேடியோ உப-உறுப்புகள்
இறக்குமதி செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்)

18, ஸ்ரான்லி ரேட், - - யாழ்ப்பர்ணம

எமது வாடிக்கைக்காரர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துகள்
உரித்தாகுக
இராமசாமி அன் சன்ஸ்
ஆஸ்பத்திரிவீதி, — யாழ்ப்பாணம்.

போன்: 7168
ஈழநாட்டு சங்கீதப் பிரியர்களே !
நீங்கள் சங்கீத கருவிகள் இல்லாமல்,
அல்லது பழைய கருவிகள் திருத்த வழியில்லாமல்
கவலைப்படுகிறீர்களா?
இதோ
உங்கள் கவலையைத் தீர்க்க
உங்களுக்கு அறிவித்தல் தருகிருர்கள்
34 வருட அனுபவம் பெற்ற நிபுணர்கள்
உங்கள் கருவியை பற்றிய கவலை எதுவாயினும்
இன்று விஜயம் செய்யுங்கள்!
தி பம்பே ஆர்மோனியம் கம்பெனி
122, செட்டியார் தெரு, — கொழும்பு - 11
போன்: 5817

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துங்கள்!
கொழும்புஸ்ருடியோ
(யாழ் நகரில் 'புளக்' தயாரிக்கும் ஒரே ஸ்தாபனம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
கே. கே. எஸ். ரோட், சுன்னுகம்
கே. கே. எஸ். ரோட், தெல்லிப்பளை.
பருத்தித்துறை ரோட், அச்சுவேலி

## சமய அறிவின்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(Vernacular Language) அடிமைப் பாஷை எனப் பெயரிட்டும் அடக்கி ஆண்டார்கள். ஆனாலும் எமது தாய் நாடாகிய பாரததேசமக்கள் அரும்பெருந் தியாகங்களைச் செய்துசுதந்திரம்பெற்றதை உணர்ந்த ஆங்கிலேயர், சேய் நாட்டினராகிய எமக்கு எவ்வித சிரமமும் இல்லாமலே சுதந்திரம் அளித்தனர்.

1948-ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற இலங்கைமக்களாகிய எமக்கு அதுமுதலாகவே ஒரு தனித்துவம் ஆயிற்று. இலங்கை வாழ் மக்களாகியநாம் எம்முன் இனத்தால் பேதம், மத்தால் பேதம் முதலான பேத உணர்ச்சிகள் உடையவராக இருந்தாலும் நாமெல்லாம் இலங்கையர் என்ற தனித்தன்மையைப் பெற்றுவிட்டோம். அதனை மறந்துவிடலாகாது. ஒரு சமுதாயத்தவர், தமது அயல் சமுதாயத்தவரோடு தொடர்பில்லாமல் ஒருபோதும்வாழமுடியாது. தொடர்புகொள்ள வேண்டுமாயின் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்து உதவுமுகத்தால் வேற்றுமையை மறந்து ஒற்றுமைகாணமுயலவேண்டும். முதலில்ஒருவரதுபாஷையை மற்றவர் விரும்பிப்பயிலவேண்டும். பிறரது கட்டளைக்குப்பணிந்து பயிலுவது சுதந்திரமுடைமைக்குப்பொருந்தாது. பாஷையைப் பொறுத்த அளவில்இலங்கை வாழ் மக்கள்யாவருமபெரும் பாக்கியம் செய்தவர்கள். ஏனெனில் சிங்களம், தமிழ் என்னும் இரண்டுமே எமது நாட்டின் தாய்ப்பாஷையாக அமைந்துள்ளன. இந்த இரு பாஷைகளையும் விரும்பிக்கற்பவர்கள் சமூகவாழ்வை வளர்ப்பவராவர். ஆங்கிலம் உலகந்பொதுப்பாஷை. உலக அறிவு விரிவடைவதற்கு ஆங்கிலத்தை அவசியம் கற்கவேண்டும்.

சமூகவாழ்வு சிறந்து ஓங்குவதற்குச் சமய அறிவு மலரவேண்டும். சமயம் என்ற உடனே பேத உணர்ச்சிதான் முதலில் தோன்றும். சமய ஆன்மீகத்துறையை வளர்ப்பதற்கு மாத்திரம் உரியதல்ல. உலக வாழ்வுக்கும் பெரிதும் உதவுவது என்ற உண்மை இப்போது பரவிவருவதுகண்டு மகிழவேண்டியவர்களாக இருக்கிறோம். சில சிறப்புக் கொள்கைகளைத் தவிர ஏனைய பொதுத் தன்மைகள் பல எல்லாச்சமயத்தவருக்கும் உடன்பாடானவையே யாகும். சமய அடிப்படையில், தெய்வீக வழிபாடு எத்தனையோ தீமைகளை, தியவழிகளைத்தடுக்கவல்லது. தெய்வ வழிபாடுசெய்வதை எங்கள் நாட்டிலுள்ளபௌத்தமோ, சைவமோ இஸ்லாமோ, கிறிஸ்தவமோ எந்தச்சமயமும் விலக்கவில்லை போற்றியே வருகின்றன.

ஆகவே சமய அறிவை நம் சிறுவர் மத்தியில் நன்கு மலரச்செய்து, நாமெல்லாம் இலங்கைமாதாவின் மக்கள். அதனால் சகோதரர்களாகிய நாம் இலங்கையர் சமூகம் எல்லாத்துறையிலும் வளருவதற்குரிய நல்ல பொது அம்சங்களைக்கொண்டு முன்னேறுவோமாக.

# புதுமை எழுச்சி

(அரியாலையூர் வே. ஐயாத்துரை)

சித்திரையாள் வரும் செம்மையைப் பாரென்று
கத்திடும் சேவல்கள் கானமுடன்
நித்திரை தன்னில் நினைவு இழந்தவர்
சித்தந் தெளிந்தே விழித் தெழுவார்.

சுத்திகள் செய்குவார் தூய்மையாய் இல்லங்கள்
வைத்திடுவார் கும்ப ஒளி விளங்க
முற்றத்திற் பொங்கியே முத்தர்க்கு ஈகுவார்
சுற்றத்தா ரோடு சுவைத்து உண்பார்.

கட்டிய புத்தாடை கண்டு மகிழுவார்
கைவிசேடம் பரிமாறிக் கொள்வார்
மித்திரர் சுற்றத்தி னோடுற வாடிடச்
சித்திரை கண்டு சிரிப்பாளே.

வைத்தநற் பந்தயத் தேங்காயடியொடு
வண்டிற் சவாரிகள் ஊஞ்ச லாட்டம்
இத்தினம் தன்னிற் பலவிளை யாட்டுக்கள்
வைத்து மகிழுவார் மா நிலத்தோர்.

புத்தின மாகிய சித்திரையாள் தினம்
புத்தமத மிந்து போற்று வரே
சித்தந் தெளிந்திடத் தேவா லயங்களில்
பக்தி யொடு விழா வைத்திடுவார்.

மொழி தனிலே வேறு பட்டாலும் முது
வழி தனிலே ஒன்று பட்டார் காண்
எழிலுடனே தமிழ் சிங்களப் புத்தினம்
என் றென்றும் இப்புவி வாழியவே.

## பராபவ ஆண்டே! பாங்குடன் வருக!!

—கவிஞர் மு. க. சூரியன் —

### ஆசிரியப்பா

''பராபவ'' ஆண்டே! பாங்குடன் வருக!!
பராபவம் என்பதே பாரைவிட் டகல,
ஓரிரு ஞாலம் மாண்பொடு மிளிர,
ஞாயிறு போன்று நல்லொளி பரப்பி,
வறுமையும் பிணியும் பஞ்சமும் அகலச்,
செறுவெலாம் விளையச் செகம்நனி மகிழ.
மன்பதை கூட்டம் மற்றுள உயிர்கள்
இன்பமே பொங்கி இனிதொடு வாழ,
கொலை பொய் களவு குவலயத் திரிய,
நிலைகொளத் தருமம் நீ நனி வருக!
வருக! வருக!! வளமொடு வருக!!!
தருக! தருக!! தாழ்விலா நலனே!!!

## இராசி பலன் ...


(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மகர இராசியாளருக்கு இவ்வாண்டில் பொருள் ஆதாயம் காணப்படினும் முற்பகுதியில் ரோகபீடை, நடுப்பகுதியில் மத்திமபலிதம், பிற்பகுதியில் செய்காரியத் தடையுண்டு. பொதுவாக இவர்களுக்கு மத்திமபலிதம் என்று கூறலாம்.

கும்ப இராசியாளருக்கு இலாபம் காணப்படுகின்றதாயினும் முற்பகுதி பூரண சுகமும் நடுப்பகுதியும் கடைப்பகுதியும் மத்திம சுகமும் நடக்கும். தெய்வானுகூலம், கீர்த்தி, பொருள் வரவுண்டு.

மீன இராசியாளருக்கு நடுப்பகுதியும் பிற்பகுதியும் ரோகபீடை-பொருள் சேதம் இருப்பினும் பொதுவாக நற்பலன் காணப்படுகின்றது. தெய்வானுகூலம், பொருள்வரவு, அதிகாரம், விரும்பியவை கிட்டலுண்டு.

உத்தரவாதமுள்ள உயர்ந்தரகப் புடவைகளுக்கும்
திருமண வைபவங்களுக்கேற்ற
சேலைகளுக்தும்
C. W. E. புடவைகளுக்கும்
97-ம் இலக்க கூப்பனுக்கு லேடி ஹமில்ட்டன்
கிறேப் சில்க் சாறிகளும் பெற்றுக்கொள்ளலாம்.
'ராஜ்கோபால்ஸ்'
36/1, பெரியகடை, — யாழ்ப்பாணம்.


எல்லோருக்கும எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்! போன்: 7016
அரசாங்க கட்டுப்பாட்டு விலைகளில் அடங்கிய பொருட்கள்
எம்மிடம் கையிலிருப்பிலுண்டு.
எங்களிடம்: சகலவிதமான தண்ணீர்ப்பம்புகளும், "றட்ஜ்" (Rudge) சைக்கிள்களும்
உபகரணங்களும் மின்சார உப-உறுப்பினங்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
நியூ ரோன் எலெக்ரிக்கல்ஸ்
228. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் சுவை பதார்த்தம்

பரிமாறுபவர்—
'பன்னீரன்'

## காலையில் காப்பி

விடியற்காலை. அவன் கட்டிலில் புரண்டு படுக்கின்ருன். மாமரத்துக்கொம்பில் குயில் கூவுகின்றது அரைத் தூக்கத்தில் கிடக்கும் அவன் செவிகளில் அந்தக் குயிலின் ''குக்கூ... குக்கூ...' என்ற குரல் ''அத்தான்... அத்தான்'' என்று தன் மனைவி அழைப்பதுபோல் ஒலிக்கின்றது. அவன், தன் கண்களைத் திறந்து பார்க்கின்ருன். இன்னும் இருள்கலையவில்லை அவன் எண்ணம் சுழல்கின்றது.

எங்கோ, கிராமத்தில் விடுத்துவந்த தன் இளம் மனைவியின் மலர்முகம், அந்த முகத்தில் நிலவிய தவிப்பு, அந்தத் தவிப்பைத் தீர்க்க அவன் சொல்லிய ஆறுதல் மொழிகள், இதழ் குவித்து அவள் அவனுக்கு விடை கொடுத்து அனுப்பியது எல்லாவற்றையும் நினைத்துக் கொள்கிருன்.

இதற்கெல்லாம் காரணம், அந்தக் குயிலின் வேதனைக் குரல்தான். அதற்காக அதனை அவன் சபிக்கவில்லை. விடியும்போதே, தன் நல்லக் கிழத்தியின் இன்முகத்தை நினைவூட்டியமைக்காக குயிலை அவன் வாழ்த்துகிருன். அது கூவுகின்றது ''குக்கூ...குக்கூ... என்று. அதன் பொருள் அவனுக்கு விளங்குகின்றது, ''அத்தான்...அத்தான்'' என்று தூரத்திலிருந்து காற்றில் தவழ்ந்துவரும்குரல்ஒன்றும் ''மச்சாள், மச்சாள்...'' என்று ஒலிக்கின்றது. அந்தக் குயில் கும்மாளத்தோடு பறந்து செல்கின்றது. அவன் ஏக்கத்தோடு எழுந்திருக்கிருன். ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதால்...இனி கடையில் போய்த்தான் காப்பி அருந்தவேண்டும்!

## ரயில் பணியாரம்

இரவு ரயிலில் பிரயாணம் செய்கின்றேன். பிரயாணிகளில் பலர் குறட்டைவிட்டு நித்திரையடிக்கிருர்கள். நித்திரைவிட்டு எழுந்திருக்கிறவர்கள், வாயிலில் நின்றிருக்கும் என்னிடம் வந்து, ''இது எந்த இடம்'' என்கிருர்கள். இன்னும் சிலர் ''முன்னுலே வருவது எந்த ஸ்டேஷன்'' என்று கேட்கிருர்கள்.

நான் மௌனம் சாதிக்கிறேன். பின்னே என்ன செய்வது; எனக்குத்தெரிந்தாலல்லவோ, பதில் சொல்வதற்கு.

ஒருவர் வருகிருர். ''இது என்ன மழையோ'' என்கிருர். மழையாவது மண்ணுங்கட்டியாவது. ஒன்றுமில்லை. என்ருலும், நான், 'ஆமாம் லேசாகப் பெய்கிறது'' என்கிறேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப்போகிருர். ஸ்டேஷன் வருகிறது. நான் பெயர்ப் பலகையைக்கவனிக்கிறேன். அதில் 'பளை'என்று எழுதப்பட்டிருக்கின்றது இப்பொழுதுதான் எனக்கு விஷயம் புரிகின்றது. அவர் ''இது பளையோ'' என்று கேட்டிருக்கின்ருர் நான் மழை பெய்கின்றது என்று பதில் சொல்லியிருக்கின்றேன்.

## சீ .னி

"ழ" என்ருல்யாழ்ப்பாணத்தில் பல அர்த்தங்கள் உண்டு. ''சீச்சீ...'' என்ருல் கூடாது என்று பொருள்.

(7-ம் பக்கம் பார்க்க)

# புத்தாண்டும் புதுவாழ்வும்

(3ம்பக்கத் தொடர்ச்சி)

ஆன்மாக்கள்யாவும் ஈசனுடைய ஆலயங்கள். ஆகையினுல் அவ்வுயிர்களனைத்தும் வாழும்படியாக வணங்கல் வேண்டும். நாம் மாத்திரமன்று; எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவேண்டுமென்று வணங்குவதே அறிஞர்க்கழகு.

தேவாரம் பாடிய நாயன்மார்கள், உலகத்திலுள்ளவர்கள் அவற்றைப்பாடி இறை வழிபாடாற்றி நல்வழி அடையவேண்டும் என்ற நல் நோக்குடனேயே பாடினர். தாயுமானசுவாமிகள்,

''எல்லோரும் இன்புற்
றிருக்க நினைப்பதுவே
யல்லாமல்
வேறென்றறியேன்
பராபரமே''

என்று கூறுகின்ருர்.

''ஒன்றேகுலமும்; ஒருவனே
தேவனும்
நன்றே நினைமின்;
நமனில்லை; நாணுமே
சென்றே புகுங்கதியில்லை;
நும்சித்தத்து
நின்றே நிலைபெற
நீர்நினைந்துய்மினே''

என்பது திருமூலர் மந்திரம்.

எனவே எல்லோரும், ''உலகம் வாழவேண்டும்'' என்ற உயர்ந்த தேசிய நோக்குடன் இறைவழிபாடியற்றல் வேண்டும். அங்கே மதப்பிரிவினை, ஜாதிப் பிரிவினை, சுயநலம் சிறிதேனும் இருக்கல்கூடாது. [illegible] பூசிச் செல்வராம் மாணிக்கவாசகப் பெருந்தகை,

''சாதிகுலம் பிறப்பென்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலிநாயேனை
அல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யான்எனதென்னுரை
மாய்த்து
கோதிலமுதானானைக்
குலாவுதில்லை கண்டேனே''

என்று இறைவனை வேண்டுதல்செய்கின்ருர்.

நாமும் அவ்வாறு வழிபாடு செய்து நமமிடையேயுள்ள தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிய முயற்சித்தல் வேண்டும்.

அப்பொழுதுதான் தேசிய ஒற்றுமை மேலும் வளர்ச்சியடையும். மக்களிடையே சமரசசன்மார்க்கம்நிலவும். சமய, ஜாதிப் பூசல்களும் இனவேற்றுமைகளும் ஒழிந்திடும் உலகம் யாவும் ஒரு குடும்பமாகும். அரசியலில் மட்டுமன்றி சமூகத்திலேயும் தேசிய ஒற்றுமை உண்டாகவேண்டும்.

ஆகவே வாழ்நாளை வீணுக்காது இந்து-பௌத்த மதத்தவர்கள் இணைந்து கொண்டாடும் தேசியத் திருநாளாகிய ''பராபவ'' என்னும் இப்புத்தாண்டிலே நம்மத்தியிலிருக்கும்படியான பழைய குரோதங்களை மறந்து, இன, மத, ஜாதி வேற்றுமைகளைப் பாராட்டாது, தேசிய ஒற்றுமைக்காக [illegible] உழைத்து [illegible] இறைவனைப் பிரார்த்தத்துப் புதுவாழ்வு வாழ முற்படுவோமாக!

உங்களுக்குத்
தேவையான

பேக்கன்
ஹாம்
சொசேஜஸ்
பட்டர்

இன்னும்
குளிர்ச்சி பண்ணப்பட்ட
உணவு
வகைகளுக்கு

பாம் கோட்

மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது

புத்தாண்டு
வாழ்த்துக்கள்

சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
உங்கள் டயர்களைப்
புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்

நோர்தேண்
இன்டஸ்ட்ரீஸ்

8/1, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
போன் : — 7158

உத்தரவாதமுள்ள உயர்ந்தரகப்
பிடவைகளுக்கும்
திருமண
வைபவங்களுக்கேற்ற
சேலைகளுக்கும்
எம்மிடம் விஜயம் செய்து திருப்தியடையுங்கள்

த. குமாரசாமி

44, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்

கொழும்பு
றெஸ்ரோறன்ற்

கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.
உத்தரவாதமுள்ள உயர்ந்த ரசப்புடவைகளுக்கும்
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டு வேட்டி, சால்வை
சேலைகளுக்கும்
எம்மிடம் விஜயம் செய்து திருப்தி அடையுங்கள்
எமது வாடிக்கை காரர்களுக்கும் அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது புதுவருஷ நல்வாழ்த்துக்கள்!

எஸ். சவிரிமுத்து

73, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ 'எவர் சில்வர்' பாத்திரங்கள்
★ பெண்களின் கூந்தல் முடிகள்
போன்ற நாளாந்தப் பொருட்களும்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்!

B. J. அலோசியஸ்

32, 34, பெரிய கடை, யாழ்ப்பாணம்:
கண்டியிலுள்ள
ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்கோ வின்
ஏஜெண்ட்
தங்கமுலாம் பூசிய நகைகள்
விசேஷமாக:-
காப்புகள், தோடுகள், சங்கிலி
தாலிக்கொடி முதலியன
புடவைத் தினுசுகளுக்கும் விஜயம்
செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமையான பொதுநலம்

--திமிலை மகாலிங்கம்--

சுயநலமும் தனிநினைவும் கொண்டோர் மற்றைத்
தொடர்புகளையறுத்திட்டார் குறுகிவிட்ட
செயலனவாய்த் தொழில்கொண்டார் என்றேசுட்டித்
திட்டுதலைச் செவிகேட்கும் தினமே இந்த
வையனுலகம் பிறந்திட்ட காலமெல்லாம்
விதிவழியே நடக்கிறதோ மேன்மையென்ற
செயலதனைத் தலைக்கொண்டு திரிவதல்லால்
சிந்தனையைக்கொண்டெதையும் செய்வதில்லை.

ஃ ஃ ஃ

எனப்பலபேர் புகன்றிட்டார் சொந்தமென்ற
இருட்டறைக்குச் செல்வமெனும் ஒளியை யூட்டி
மனப்பலமும் உடற்பலமும் மக்களென்ற
வகைப்பலமும் பெற்றிங்கே வாழுகின்ற
சனப்புழுவோர் தனிப்பாட்டில் வாழ்வாரென்று
சாற்றுவது சரிப்படுமோ சந்திவீட்டில்
வனப்புடையோன் வருகின்றான் அவனைக்கண்டு
வாய்நிறையச் சிரிக்கின்றான் மகிழுகின்றான்.

ஃ ஃ ஃ

அவனுக்கும் அவளுக்கும் உறவுமென்ன
ஆரவனின் பேரென்ன ஊருமென்ன
இவளுக்கு அவன்மேலே காதலென்ன
எங்களுக்கு மதிப்பில்லை எவனோவந்து
செயலுக்குத் துணிந்தானே என்று கண்ணைத்
திசைநோக்கித் திருப்பியவர் சேதிசொல்லப்
புயலுக்கும் மிகையான வேகமாகிப்
புறப்படுவோர் அவர்நோக்கிற் பொதுமையில்லை.

ஃ ஃ ஃ

அன்புக்கும் உறவுக்கும் அடிமையாகி
அங்குவரும் வாலிபனை இடைமறித்து
என்பக்கம் வருகின்றீர் ஞாயமென்ன
எவருக்குச் சொந்தமென ஏக்கமாகித்
துன்பத்தால் வாடுகின்ற பொதுநலத்திற்
சுமக்கின்ற பெரியோரின் தொழிலையேய்க்கப்
பண்பொத்த பொதுநலமு முண்டோ இந்தப்
பார்போற்ற இதுபோதும் என்ன சொல்வீர்!

ஃ ஃ ஃ

என்வீட்டுத் தேனீரிற் சீனியில்லை
இல்லாளின் உடல்மூடச் சேலையில்லை
முன்வீட்டில் கறியென்ன வருவோர் யாவர்
முகஞ் சொல்லும் குறியென்ன என்றுகண்டு
பண்பாட்டிற் கூறாத பொதுநலத்தை
படைத்தின்பம் காண்போர்கள் பரவும்போது
தன்பாட்டில் சுயநலமாய்த் திரிவதாகச்
சாற்றுவதும் பொருந்ாது யாதுசொல்ல!

# மருதமரத்தடி சித்திவிநாயகர்

## சித்திரைப் பிறப்பில் நடைபெறும் சித்திரத் தேர் விழா

— செ. கணேசவேல் —

இலங்கையிலுள்ள விநாயகர் திருத்தலங்களில் பல புராதனமாக உள்ளன. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் இவைகளுள் பழம் பெருமைவாய்ந்ததும், புதுமையுடையதுமாகும். இவ்விநாயகராலயம் யாழ்ப்பாணத்திலிருந்து சங்கானை ஏகும் வீதியிலுள்ள மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரிக்கு முன்பாக அமைந்துள்ளது. இவ்வாலயத்துக்கு மு பாகவும், பின்பாகவும் உள்ள இரு வாசல்களிலும் நெடிய கோபுரங்கள் கோவிலை அழகுபடுத்துகின்றன. இத்தலம் மூன்று பக்கங்களும் நெல் வயல்களால் சூழ்ந்திருக்கின்றது. இவ்வாலயம் மானிப்பாய் மருதடி விநாயகர் என்ற பெயரைப் பெற்றிருந்தும், யாழ்ப்பாணத்தில் ''மருதடி'' என்றால் மானிப்பாய் மருதடி விநாயகரென்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கு கிழக்குப் பக்கமாக மிகவும் முதிர்ந்த மருதமரமொன்று தலவிருட்சமாகக் காட்சியளிக்கிறது. இதன் காரணமாகவே இதற்கு ''மருதடி விநாயகர்'' என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த மருதமரத்தடியிலேயே முதல் முதலாக விநாயகரை வைத்து வழிபாடு செய்யத் தொடங்கியதாக அறிகிறோம். இந்த மருதமரமும், ஆலயத்துக்கு மேற்குப் புறமாக அமைந்திருக்கும், பூக்கள் நிறைந்த திருக்குளமும் மிகவும் பழமைவாய்ந்ததென்று கருதப்படுகிறது. இப்பொழுது மூலஸ்தானம் அமைந்திருக்கின்ற இடத்திலே ஒரு தவசிரேஸ்டர் தியானத்தில் இருந்து இறுதியிலே சமாதி நிலை அடைந்துள்ளதாக நூல்கள் கூறுகின்றன.

தமிழ் மன்னர்கள் காலத்திலே இந்த ஆலயம் பல சிறப்புக்கள் அடைந்து விளங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியிலே வர்கள் கோவிலைஇடித்துத் தரைமட்டமாக்கி கிறிஸ்தமதத்தைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்தார்கள். இதன் பிரதானமான அம்சமாக இவ்வாலயத்திற்கு முன்பாக ஒரு மருத்துவ மனையும், அதனுள்ளே இருக்கும் கிறிஸ்தவ தேவாலயமும் இன்று எம்முன்னே காட்சியளிக்கின்றன. இக்கிறிஸ்தவ தேவாலயம் முன் பக்கம் எழுந்தபோது கிழக்குப் பக்கமகக நோக்கியிருந்த பிள்ளையார் தாமாகவே மேற்குப்புறமாகத் திரும்பிய அற்புத நிகழ்ச்சி நடைபெற்றதென் பரம்பரைக் கதைகள்மூலமாக அறிகிறோம்.

முதன் முதலில் சிறிய ஆலயமாக உருப்பெற்று ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து இந்துக்களால் பொங்கல், பூசை என்பன கிரமமாக நடைபெற்றுவந்தன. எனினும் இந்த ஆலயத்தின் அபாரமுன்னேற்றத்தைக் கண்டு அன்று இருந்த ஆட்சியாளர்கள் தடைபோட்டும், இந்துமதஎதிர்ப்பாளர்கள் முட்டுக்கட்டையாகவும் இருந்தனர். ஆனால் எல்லாவிதமான எதிர்ப்புக்களையும் சமாளித்து பல சைவப்பெரியார்களின் தீவிரமுயற்சியினால் இவ்வாலயம் படிப்படியாக முன்னேறத் தொடங்கியது. கோயில் திருப்பணிகள் குறிப்பிட்ட அளவிற்கு நிறைவேறியதும் திருவிழாக்கள் நடாத்தி விநாயகப் பெருமானைச் சைவமக்கள் வழிபடத் தொடங்கினர். இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களின்போது தமிழகத்திலிருந்து பல பெரியார்கள் சமயவிரிவுரைகள் நிகழ்த்துவதற்கும், உபந்நியாசங்கள் செய்வதற்கும் அழைக்கப்படுவது வழக்கம் இசைவல்லுனர்களும், பக்திப்பாடகர்களும் அடியார்களுக்கு சிறந்த இசைவிருந்துகளை வழங்குவார்கள்.

வடபகுதியில் காணப்படுகின்ற சைவ ஆலயங்களில் மருதடி விநாயகர் மிகவும் மூர்த்திகரம் நிறைந்து தல விசேடமும் பெற்று தீர்த்த மகிமையும் நிறையப்பெற்றுள்ளது இங்கு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று கோபுரமும் பரிவாரமூர்த்திகளும் புத்தம் புதியனவாய் காட்சி தருகின்றன. கோவிலுக்கு வடக்குப் புறமாக சைவ அபிமானிகளின் முயற்சியினால் அடியார்களின் வசதிக்காக மடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் புதுவருடத் தினத்தன்று தேர்த்திருவிழா நடைபெறும். இந்தப் புனிதத்தினத்திலே இலங்கையின் நாலாபக்கங்களிலுமிருந்து இந்துக்கள் திரள் திரளாக இங்கு கூடி வழிபாடு செய்வர்.

## பல் சுவை பதார்த்தம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

''சீ...!'' என்று இழுத்துவிட்டால், ''ஓகோ'' அல்லது ''அப்படியா'' அல்லது 'உண்மையாகவா'' என்று பொருள்படும் இந்த வார்த்தைக்குப்பொருள்கொள்ளும்போது அதுபாவிக்கப்பட்ட சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றையும் கவனிக்கவேண்டும்.

மலைநாட்டில்இதை கௌரவக்குறைவான வாழ்க்கையாகவே கருதுகிறார்கள். மரியாதைக்குரியவர்களிடமும், வயது முதிர்ந்தவர்களிடமும் இதைப்பாவிக்கப்படாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் பொதுவாக எல்லாருமே இதைப் பாவிக்கிறார்கள். ஊருக்கு ஊர் பாஷை வித்தியாசம். இதைச் சொன்னதற்காக என்னை நீங்கள் ''சீ. நீ'' என்றுசொல்லமாட்டீர்களென்று எனக்குத்தெரியும்

## தாழ்வாய் உயர்வாய்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

—இவனெங்கே குடும்பத்தைக் காப்பாற்றப்போகிறான்; உதட்டுக்கு மீறிய பல்லாய் இப்பவே இருக்கின்றானே!— என்று ஏசப்பட்ட ஒருவன் தன் குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாகச் சாதிக்காத காரியத்தைச் சாதித்திருக்கிறான்.

இத்தனையும் எப்படி நடைபெற்றன?.. இளவயதில் ஏற்பட்ட எழுச்சியால்!

எழுச்சி ஏன் ஏற்பட்டது? பிறர் குறை கூறியதால்! பிறர் ஏன் குறை கூறினார்கள்?

தாழ்வு மனப்பான்மையெனும் 'கூச்சு சுபாவம்' இருந்ததால் தான்!

'கூச்ச சுபாவம் எனும் தடைக்கற்கள் குறுக்கே விழவிழ முன்னேற்றத்தின் வேகம் அதிகரிக்கும். ஆற்றின் நீரைத் தடைப்படுத்தினால் அதன் வேகம் அதிகரிப்பதைப்போல!

## கடித்துச் சாப்பிட..

மனிதனை நாய் கடிப்பது சர்வசாதாரணமான விஷயம். ஆனால் நாயை மனிதன் கடிப்பதென்றால்......! காலம் போகிற போக்கைப் பார்த்தால் அதுவும்கூடச் சாதாரண விஷயமாகிவிடும் போல் தெரிகின்றது, சில காலத்துக்குமுன் ஜப்பானில் நடந்த ஒரு சம்பவம்பற்றி பத்திரிகைகளில் வெளியான செய்தியொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது

திரு...குடிவெறியில் திரும்பிக்கொண்டிருந்தார். தெருவாரத்தில் நின்றிருந்த நாய்ஒன்றுஅவரைப்பார்த்து உறுமியது. அவரும் சளைக்கவில்லை. திருந்பி உறுமினார். அது குலைத்தது. அவரும் குலைத்தார். அது தாவிவந்து அவர்மேல் பாய்ந்து கடித்தது அவர் விடவில்லை நாயின்மீது விழுந்து பிடுங்கினார். அதனால், நாயைக்குற்றுயிரோடு மிருக வைத்தியரிடம் கொண்டுபோனார்கள்.

வைத்தியரிம் கொண்டுபோகப்பட்ட நாய்க்குஎன்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் அதுமட்டும் தெரிந்திருந்தால் ''மனிதன் கடித்துநாய்மரணம்'' என்று பத்திரிகைக்காரர்கள் பிரமாதமாக செய்தி வெளியிட்டிருப்பார்கள்.


வீட்டுப் பெண்கள் விருப்புவது

எவர் சில்வர் பாத்திரங்கள்

சமையலறையை அலங்கரிப்பது

எவர் சில்வர் பாத்திரங்கள்

உங்கள் விருந்தாளிகளைக்

குதூகலப்படுத்தும்

எவர் சில்வர் பாத்திரங்களுக்கு

S. V. பொன்னம்பலம்

&

சன்ஸ்

இல. 15, செட்டியார் தெரு, கொழும்பு.

தொலை பேசி: 5597


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்கள், ஒரு புத்தாண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சம் கொள்வார்கள். தலைவர்களுக்கும் இது ஒரு காயகல்ப ஒளஷதம்போல் இருக்கிறதாக்கும். இல்லாவிட்டால் பொறுப்பு வாய்ந்த தேசத்தலைவர்கள் பொறுப்பில்லாத, விருப்பு பேசும், டம்பம் மிகுந்த, அரசியல் நிரக்ஷரகுக்ஷிகளின் வெப்பியாரத்தை தணிப்பதற்காக ஊரவரின் காசைக்கரைக்கும் ஊர்வலங்களிலும் தமாஷாக்களிலும் கேளிக்கைகளிலும் கலந்து கொள்ள ஒப்புக்கொள்வார்களா?

ஒரு சிகரம் கட்ட ஆயிரம் ரூபாய், ஒரு கூட்டம்மேளம் நூறு ரூபாய், ஒரு மாலை பத்து ரூபாய், ஒரு வெடி மூன்று ரூபாய். எத்தனை சிகரங்கள், எத்தனை கூட்டம் மேளம், எத்தனை மாலைகள், எத்தனை வெடிகள்? இவைபோக கார் கூலி எத்தனை, மின்சார வெளிச்சத்துக்கு எத்தனை, விளம்பரத்துக்கு எத்தனை?

ஒரு தாமாஷாவுக்கு செலவழிக்கும் காசைக்கொண்டு ஒரு கோழிப்பண்ணை இயக்கலாம். ஒரு வரவேற்புபசாரம் ஒரு மாட்டுப் பண்ணையை வளர்க்கும். ஓர் ஊர்வலம் ஒரு நெசவுசாலைக்குதவும். எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு, எத்தனை பேருக்கு வயிறு வளர்ப்பு!

சித்திரை வருடம் பிறப்பது இளவேனிற்காலத்தின் உதயத்தைக் குறிக்கின்றது. மரங்களும் செடிகளும் பழைய இலைகளை உதிர்த்தி புதிய தளிர் விடும் காலம். இயற்கை தனது பழைய ஆடைகளைக் களைந்துவிட்டு புத்தாடை புனையும் காலம். முற்காலத்தவர்கள் இந்நாட்களில்தான் வீடுவாசல்களுக்கு வெள்ளையடித்து, சாணியால் மெழுகி, புதுக்கோலம் தீட்டி புதுவருடத்தை வரவேற்பார்கள். குளிரும் பனியும் நீங்கி சோழகத்து இன் தென்றல் வீசி மனிதர்களின் பீடை பிணிகளைத் தீர்க்கும் பொற்காலம். பழையன கழிந்து புதியன புகும் காலம். எவ்வகையில் பார்த்தாலும் புதுமையைக் குறிக்கும் ஒரு சுப காலம்.

ஆகையால் இந்த நேரத்திலாவது நாம் ஒரு விதி செய்வோம். பொது மக்களின் வருந்தித் தேடிய பணம் வீண் விரயமாவதைத் தடுப்போம். தமாஷாவுக்கும் வேடிக்கைகளுக்கும் முழுக்குப் போடுவோம். ஆக்கவேலைகளுக்கு ஊக்கமளிப்போம், பஞ்சமும் பிணியும் தலைவிரித்தாடுகின்ற இச்சமயத்தில், படித்த வாலிபர்கள் ஊர் சுற்றித் திரிந்தும் ஆற்ருமல், களவெடுக்கவும் துணிகிருர்கள். அவர்களுக்கு உற்சாகத்தையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் உண்டுபண்ணுவதென்று பிரதிக்ஞை செய்வோம். எளிமை வாழ்வும் விழுமிய நோக்கமும் தான் சீவியத்திற்கு சோபை அளிக்குமென்ற உண்மையை எம்முடைய முன்மாதிரியால் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுவோம். தமாஷாக்களுக்கு போவதில்லையென்று சத்தியம் செய்வோம். அவற்றிற்கு தயாராகும் பொது மக்களை அவ்விதம் செய்ய வேண்டாமென்று முன்கூட்டியே எச்சரித்துவிடுவோம். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச்செகத்தினை அளித்திடுவோம்' என்ற பாரதியார் வாக்கை முழுமையாக நிறைவேற்ற நாம் சக்தியற்றவர்களானபோதிலும் கூடியவரையில் நமது நாட்டின் பஞ்சத்தையாவது போக்குவதற்கு திட்டமியற்றுவோம். திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கங்கணம் கட்டுவோம்.

# சமய அறிவின் . . .

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

அரிது. குறுகிய மனமுடையவர்களுக்கு இந்த உண்மையைப் போதனையால் மாத்திரமன்றிச் சாதனையாலும் உணரச்செய்வதே அறிவு சான்ற மக்கள் தம் கடனும். சமயத்துறையில் சிறந்து விளங்கிய பெரியார்கள், சமூகத்துறையில் இந்த உண்மை நன்கு புலப்படும் வண்ணம் வாழ்ந்துகாட்டியிருக்கிருர்கள்.

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இலங்கைப் பாடசாலைகளில் மாணவர் மத்தியில் சமய அறிவுக்கும் சமூகத் துறைக்கும் இடையில் பெரிய ஒரு திரையிடப்பட்டிருக்கிறது. அதாவது, சமயக்கல்வி என்பது ஆத்மீக அறிவுவளர்ச்சிக்குமாத்திரம் உரியது; சமுதாயவாழ்வுக்குத் தொடர்பில்லாதது என ஒதுக்கப்பட்டிருந்தது. அக்காலத்திலே, இலங்கை ஒரு குடியேற்றநாடு என்ற பெயருடன் இருந்தது. இலங்கையில் பரம்பரையாகவாழ்ந்து வந்த மக்களாகிய நாம், அன்று எமது நாட்டை ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர் பொருட்டுக் குடியேற்றப்பட்டவர்கள் எனக்கணிக்கப்பட்டோம். அந்த பிரித்தானியர்கள் இலங்கை வாழ் மக்களாகிய எம்மைப் பிரித்தாளுதற்கு என்ன என்ன உபாயங்கள், சூழ்ச்சிகளைச் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் அந்தரங்கத்திலே கொண்டு, வெளிப்படையாக அவரவர் சமயத்தில் அவரவர் வாழும் சமயசுதந்திரம் தருகின்ருேம் என்றும் வாழ்க்கை வசதிகள் செய்து தருகின்ருேம் என்றும் ஆங்கிலம் படித்த சிலருக்குமாத்திரம் பேனு பிடித்து உழும் அடிமைத்தொழில் வழங்கியும், எமது தாய்ப்பாஷையாகிய சிங்களம், தமிழ் என்பவற்றிற்குப் பொதுவாக

(5-ம் பக்கம் பார்க்க) )


## ஜெனரல் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

45, அம்பலவாணர் ரோட், அத்தியடி,

20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

○ டையர் புதுப்பித்தல் ○ றப்பர் பொருட்கள்


○ லற்றெக்ஸ் தயாரிப்புகள்

○ சகலவித இயந்திர அமைப்பு சம்பந்தமான வேலைகள்

○ கடைசல், ஒட்டுதல், வார்த்தல் முதலியவற்றிற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்



எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



உங்கள் மோட்டார் வாகனங்களுக்கும், உழவு யந்திரங்களுக்கும் தேவையான

**ரயர், ரியூப்**

வகைகளுக்கும்

**உப-உறுப்பினங்களுக்கும்**

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வந்திருக்கும் புதியதோர் ஸ்தாபனம்:

## P. சோமசுந்தரம் அன் கோ.,

289A, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.



## குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?

## இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினுல் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்குவேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்.

குதிரை மார்க் HORSE BRAND

தயாரிப்பாளர்கள்!
தலைமைக்காரியாலயம்:
**எல்ப்ஹெம் ஹவுஸ்**
கொழும்பு

தொழிற்சாலை:
**எல்பிஹெம் ஹவுஸ்**
மாவிட்டபுரம்

வடமாகாண விநியோகஸ்தர்கள்
**தனலக்குமி ஸ்ரோர்ஸ்**
தெல்லிப்பழை

கையிருப்பாளர்கள்:

1. மஸ்கன்ஸ் லிமிட்டெட் கொழும்பு-12

2. என். வைத்திலிங்கம் அன் கோ 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org